**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**
**எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வுத்தொடர்**

**பாராளுமன்ற தொடர் இலக்கம் 204**

# அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் முதலாவது அறிக்கை

**(2019 ஒக்றோபர்)**

குழுக்களின் பிரதித் தவிசாளர்
கௌரவ செல்வம் அடைக்கலநாதன்
அவர்களினால்
2019 ஒக்றோபர் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுகின்றது

அங்கீகாரமளிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட குழுக் கூட்ட அறிக்கைகள் பின்வருமாறு

| அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர் | | திகதி |
|---|---|---|
| 01. | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.08 |
| 02. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.15 |
| 03. | பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.19 |
| 04. | மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.22 |
| 05. | துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.26 |
| 06. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.04.05 |
| 07. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.05.09 |
| 08. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.06.20 |
| 09. | கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.09 |
| 10. | துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.10 |
| 11. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.11 |
| 12. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.12 |

| அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர் | | திகதி |
|---|---|---|
| 13. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.25 |
| 14. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.08.23 |

இதுவரை அங்கீகாரமளிக்கப்படாத காரணத்தால் மாதாந்த அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படாத குழுக் கூட்ட அறிக்கைகள் பின்வருமாறு

| அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர் | | திகதி |
|---|---|---|
| 01. | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.02.07 |
| 02. | பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.02.26 |
| 03. | தொழில், தொழிற்சங்க உறவுகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.03.26 |
| 04. | நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.04.03 |
| 05. | பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.05.23 |
| 06. | போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.06.19 |
| 07. | விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சிகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.06.21 |
| 08. | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.09 |
| 09. | கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.07.26 |
| 10. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.08.09 |
| 11. | மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.08.20 |
| 12. | அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.08.21 |
| 13. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.08.22 |
| 14. | துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.09.17 |

| அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர் | | திகதி |
|---|---|---|
| 15. | நிதி மற்றும் வெகுசன ஊடகம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.09.17 |
| 16. | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.09.19 |
| 17. | உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2019.09.20 |

**கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**முதலாவது கூட்டம் - 2019 மார்ச் 08**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ பி. ஹரிசன் (தவிசாளர்)
கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்
கௌரவ திலிப் வெதஆரச்சி

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ ஆர். எம். ரன்ஜித் மத்துமபண்டார
கௌரவ ரவீந்திர சமவீர
கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ வசந்த சேணாநாயக்க
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

**விடுமுறை பற்றிய அறிவித்தல்கள்:-**
கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே
கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

**1. பிரேரணைகள் பற்றிய அறிவித்தல்களை ஆராய்தல்:-**

**1.1 குடிநீரை போத்தல்களில் அடைக்கும் கைத்தொழிற்சாலைகளில் நீர்மானிகளை பொறுத்துதல் தொடர்பிலான அகில இலங்கை குடிநீர் கைத்தொழிலாளர்களின் சங்கச் செயலாளரின் கோரிக்கை (கௌரவ புத்திக பத்திறண- பிரேரணை இல.18)**

குறிப்பிட்ட பிரேரணை தொடர்பான அறிக்கை கௌரவ உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குழுவில் அறிவிக்கப்பட்டது.

**2. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

**2.1 மகாவலி கங்கை நீரை நாட்டினுள் தங்கவைத்தல், இடது கரையில் மணல் அகழப்படுவதைத் தடுத்தல் மற்றும் பிரம்மனாயகம அணையை நிர்மாணித்தல் - கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**2.1.1 மகாவலி கங்கை நீர் கடலுடன் கலப்பதை தவிர்த்து நாட்டினுள் தங்கவைப்பதற்கான பொறிமுறையொன்றை அமைத்தல்**

கந்தளாய் குளம் பெருக்கெடுக்கும்போது வழிந்தோடும் நீரை அதற்கு கீழ் பகுதியில் உள்ள குளங்களுக்கு எடுத்துச் செல்லுவது பற்றிய பிரேரணையை செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கௌரவ தவிசாளர், அது பற்றி ஆராயப்பட்டுவருவதாக குழுவில் தெரிவித்தார்.

திருகோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் குடிநீர் உட்பட்ட ஏனைய நீர் தேவைகளை பூர்த்தி செய்யவதற்காக நீரை தக்கவைக்கும் குளமொன்றை அமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கந்தளாய் -கலுகங்கை கருத்திட்டத்தின் கள ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், CRIP கருத்திட்டத்தின் “தோணி” ஆய்வின் கீழ் மினிபே பகுதிக்கு வழிந்து செல்லும் நீரினால் ஏற்படும் வெள்ளத்தினையும் வறட்சியையும் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்துவது தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் அக் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பிலான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதாகவும் குழுவில் அறிவிக்கப்பட்டது.

கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினரின் கோரிக்கையை கமத்தொழில் செயலாளருக்கு முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

#### 2.1.2 மகாவலி கங்கையின் இடது கரையில் மணல் அகழப்படுவதைத் தடுத்தல்

மகாவலி கங்கையின் இடது கரையில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுமெனக் குறிப்பிட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள் அதற்கான அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படல் பொருத்தமற்றதெனக் குறிப்பிட்டார்.

மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதை நிறுத்துமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

#### 2.1.3 பிரம்மணயாகம அணைக்கட்டினை நிர்மாணித்தல்

பிரம்மணயாகம அணைக்கட்டு கருத்திட்ட யோசனை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கையை கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.2 மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

#### 2.2.1. கொட்பே மீன்பிடித் துறைமுகத்தை தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நிலையமாக மாற்றுதல்

திருகோணமலை கொட்பே மீன்பிடித் துறைமுகம் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நிலையமாக மாற்றப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் பிரேரணை தெரிவித்தார்.

அத்துடன் வெளிநாட்டு படகுகளுக்கு வசதியளிக்க கூடிய வகையில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் குழுவில் தெரிவித்தார். தற்போது அங்கு படகுகளை நிறுத்திவைக்கக்கூடிய தளமொன்று இல்லையெனவும், நிர்மாணிப்புகளின் பின் அவ்விடத்தில் சிறிய கப்பல்களையும் நிறுத்திவைக்க முடியுமெனவும் கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவர் குழுவில் தெரிவித்தார்.

#### 2.2.2. பாவனையில் இல்லாத படகுகளை துறைமுகத்திலிருந்து நீக்குதல்

துறைமுகங்களில் உள்ள சிதைவடைந்த படகுகளை நீக்குவதற்கான நடபடிமுறையொன்று தயாரிக்கப்படல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் பிரேரணை தெரிவித்தார்.

சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, சுற்றாடல் அமைச்சு, துறைமுக கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் குழுவொன்றை நியமித்து அப் படகுகளை மீன் பெருக்கத்திற்காக கடலில் பொருத்தமான இடங்களில் தாழச்செய்வதற்கான கருத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் குழுவில் அறிவித்தார். அத்துடன் பைபர் அழிப்பதற்கான உபகரணமொன்று தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அக் கருத்திட்ட வேலைகளை திருகோணமலை துறைமுகம் வரை விஸ்தரிக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.3 எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறந்துவைத்தல் உட்படட வேறு விடயங்கள் - கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

### 2.3.1. எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறந்துவைத்தல்

கோகிலாய், குச்சவேலி, கின்னியா ஆகிய பிரதேசங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளபோதிலும் எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்கும் கடற்றொழில் திணைக்களத்திற்கும் இடையில் நிலவிவரும் சட்டரீதியான பிரச்சினைகள் காரணமாக அவற்றை திறந்துவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் பற்றி ஆராயுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.3.2. டைனமைட் பாவனையைக் கட்டுப்படுத்தல்

தமது பிரதேசத்தில் டைனமைட் பாவனை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அது தொடர்பில் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள், அப் பொறிமுறை தற்போது நடைமுறையிலுள்ளதாகக் குறிப்பிட்டார்.

### 2.3.3. இடமாற்ற பொறிமுறையை செயற்படுத்தல்

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலமாக ஒரேயிடத்தில் பணிபுரிந்துவரும் உத்தியோகத்தர் தொடர்பில் இடமாற்ற பொறிமுறையொன்று பின்பற்றப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் பிரேரித்தார்.

தற்போது இடமாற்ற பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக, கடற்றொழில் நீரகவளமூலங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

### 2.3.4. திருகோணமலை மீன் சந்தையில் கழிவுகள் சேர்தல் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வளித்தல்

திருகோணமலை மீன் சந்தையில் கழிவுகள் சேர்ந்துள்ளதால் துர்நாற்றம் வீசுவதாகவும் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் நகர சபைக்கு குத்தகைப் பணம் செலுத்தப்படாத காரணத்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட பிரச்சினையை தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து தீர்வளிக்குமாறு கௌரவ தவிசாளர், கடற்றொழில் நீரகவளமூலங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.4 நெல் உலரவிடுவதற்குப் பொருத்தமான இடவசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

மன்னார் மாவட்டத்தில் நெல் உலரவிடுவதற்கு உகந்த இடமொன்றை பெற்றுக்கொடுத்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் பிரேரித்தார். அதற்குப் பொருத்தமான அரசாங்கக் காணியொன்று அப்பிரதேசத்தில் இருப்பதாகவும் அதனை பெற்றுக்கொள்வதற்கு இரண்டு மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் போதுமானதெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதேச செயலாளருடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட அரசாங்கக் காணியைப் பெற்றுக்கெள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.5 நெல் விற்பனைச் சபைக்குச் சொந்தமான வாழைச்சேனை நெல் களஞ்சியசாலையை மீள பெற்றுக்கொள்ளுதல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

### 2.5.1. நெல் விற்பனை சபைக்குச் சொந்தமான வாழைச்சேனையிலுள்ள நெல் களஞ்சியசாலையை மீளப் பெற்றுக்கொள்ளுதல்

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான வாழைச்சேனையிலுள்ள நெல் களஞ்சியச்சாலை தனியார்த்துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

பிரதேச செயலாளரால் ஐந்து வருடங்களுக்கு முன் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக குழுவில் அறிவிக்கப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அது தொடர்பிலான உரிமை இல்லையெனவும் குறிப்பிடப்பட்டது.

களஞ்சியசாலை நீண்டகால குத்தகை அடிப்படையில் காணி அமைச்சுக்கு சாற்றப்பட்டுள்ளதாக கௌரவ அமீர் அலி சிஹாப்தீன் அவர்கள் குழுவில் தெரிவித்தார்கள்.

தனியார்த்துறையின் களஞ்சியசாலை வளாகமொன்றை வாடகை அடிப்படையிலேனும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், நெல் விற்பனைச் சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.5.2. நெல் களஞ்சியசாலையை சரியான தினத்தில் திறந்துவைத்தல்

மட்டக்களப்பு நெல் களஞ்சியசாலை சரியான நாளில் திறந்துவைக்கப்படாத காரணத்தல் விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர், வடக்கு- கிழக்கு நெல் களஞ்சியசாலைகளை சனவரி மாதம் 15 ஆம் திகதியின்போது திறந்துவைப்பதற்கான அறிவுறுத்தல்களை விரைவில் வெளியிடுமாறு நெல் விற்பனைச் சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.6 நானாட்டான் நெல் களஞ்சியசாலையை புனரமைத்தல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

### 2.6.1. நானாட்டான் நெல் களஞ்சியசாலையை புனரமைத்தல்

யுத்தகாலத்தில் சேதமடைந்த மன்னார் நானாட்டான் நெல் களஞ்சியசாலையை புனரமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மன்னார் நானாட்டானில் நெல் களஞ்சியசாலையொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.6.2. யோத வாவியை புனரமைத்தல்

யோத வாவியை புரமைப்பதற்கு நிதி ஏற்பாடுகள் தேவைப்படுவதாகவும் பெகோ இயந்திரங்கள் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். யோதவாவியின் ஒரு பகுதி மட்டும் புனரமைக்கப்பட்டுவருவதாகவும் அதற்கு பதிலாக குளம் முழுமையாக புனரமைக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் தொடர்பில் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அது போதிய நிலையில் இல்லாதபோது மேலும் நிதி ஏற்பாடுகளை வழங்குவதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

### 2.6.3. வீதிக் கட்டமைப்புகளை புனரமைத்தல்

கமத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான வீதிக் கட்டமைப்புகளை புனரமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார் .

குறித்த விடயம் தொடர்பில் மன்னார் கமநல ஆணையாளருடன் கலந்தாலோசித்து மதிப்பீடுகளை தயாரித்தபின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

### 2.6.4. மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்தல்

தமது பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி கடற்றொழில் மற்றும் நீரகவளமூலங்கள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்தாலோசிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சருடன் கலந்தாலோசித்து ஒரு வாரகாலத்திற்குள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் பணிப்புரை விடுத்தார்.

## 2.7 மட்டக்களப்பு ஐஸ் தொழிற்சாலையின் உற்பத்திகளை மீண்டும் ஆரம்பித்தல்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

மட்டக்களப்பு ஐஸ் தொழிற்சாலையின் உற்பத்திகளை மீண்டும் ஆரம்பித்தல் பொருத்தமானதென கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் குழுவில் தெரிவித்தார்.

அது பற்றிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் குழுவில் தெரிவித்தார்.

## 2.8 டின் மீன் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிர்மாணித்தல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

### 2.8.1. டின் மீன் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிர்மாணித்தல்

டின் மீன் தயாரிக்கும் தொழில்சாலையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

குறித்த கருத்திட்ட யோசனையை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் பணிப்புரை விடுத்தார்.

#### 2.8.2. பால் உற்பத்திகள் நிலையமொன்றை ஆரம்பித்தல்

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட பால் உற்பத்தி நிலையமொன்றை தாபிப்பதற்கான கருத்திட்ட யோசனை தொடர்பில் கௌரவ தவிசாளர் இணக்கம் தெரிவித்தார்.

#### 2.8.3. வறிய கிராமிய விவசாயிகளுக்கு சலுகையளித்தல்

வறிய நிலையிலிருக்கும் கிராமிய விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் விவசாய கிணறுகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கௌரவ தவிசாளர் இணக்கம் தெரிவித்தார்.

#### 2.8.4. கிரான்புல் குளத்தின் அணைக்கட்டை நிர்மாணித்தல்.

கிரான்புல் குளத்தின் அணைக்கட்டின் நிர்மாணிப்புகள் இதுவரை நிறைவுபெறவில்லையென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் 2000 மில்லியன் ரூபா வரையில் செலவு ஏற்படுவதால் அதனை குறைந்த செலவில் செய்யமுடியுமான யோசனையொன்றை தான் முன்வைத்துள்ளதாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 2.9 மொணராகலை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன கருத்திட்டங்களை துரிதப்படுத்தல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ ரன்ஜித் மத்தும பண்டார

#### 2.9.1. மொணராகலை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன கருத்திட்டங்களை துரிதப்படுத்தல்

மொணராகலை மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றளவிலான நீர்ப்பாசன கருத்திட்டங்கள் தொடர்பில் செலவிடப்படும் நிதி பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ ரன்ஜித மத்துபண்டார அவர்கள் குபுக்கன் ஓயா கருத்திட்டத்தின் தற்போதைய நிலை பற்றி வினவினார்கள்.

சீன கம்பனியுடன் புர்ந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டு சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அதற்கான நிதி எற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நீர்ப்பாசன அபிவிருத்தி மேலதிக செயலாளர் குறிப்பிட்டார்.

சுற்றாடல் அமைப்புகளின் அறிக்கைகள் மற்றும் சாத்தியவள ஆய்வறிக்கைகள் ஆகியவை தொடர்பில் வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றால் நிதி ஏற்பாடுகளை வழங்க முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

#### 2.9.2. ஹெட ஓயாவை அபிவிருத்தி செய்தல்

ஹெட ஓயா கருத்திட்டம் அதிகளவு நீரை விநியோகிக்கக்கூடிய கருத்திட்டமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

பொருளாதார விளைத்திறன் போதிய மட்டத்தில் இல்லாமை மற்றும் அப்பிரதேச மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்படல் ஆகிய காரணங்களினால் சாத்தியவள

ஆய்வறிக்கையும் சுற்றாடல் மதிப்பீட்டறிக்கையும் வெற்றியளிக்கவில்லையென நீர்ப்பாசன மேலதிக செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

## 2.10 அம்பேவெல புதிய நீர்த்தேக்கமொன்றை நிர்மாணித்தல் மற்றும் அணையை அபிவிருத்தி செய்தல்- கௌரவ ரவீந்திர சமரவீர

### 2.10.1. அம்பேவெல பிரதேசத்தில் புதிய நீர்த்தேக்கமொன்றைத் தாபித்தல்

அம்பேவெல பிரதேசத்தில் பிரிதொரு நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்குமாறு முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் வனசீவராசிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள், அதன் மேம்பாடு பற்றி வினவினார்கள்.

நிதி ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, நீர்ப்பாசனப் பணிப்பாளர் (பண்டாரவெல) குழுவில் குறிப்பிட்டார்.

கெரவ தவிசாளர், அது பற்றிய மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.10.2. அம்பேவெல நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டின் உயரத்தை அதிகரித்தல்

கௌரவ உறுப்பினர், அம்பேவெல நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டின் உயரத்தை அதிகரித்தல் தொடர்பிலான பழைய பிரேரணை பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார். அதனால் அதிகரிக்கும் நீர் மட்டத்தைக் கொண்டு ஒரு பகுதியை நீர்ப்பாசன சபைக்கும் ஒரு பகுதியை விவசாயிகளுக்கும் வழங்க முடியுமெவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட விடயம் நீர் வழங்கல் சபையினால் முன்னெடுக்கப்படுவதாகவும் அது தொடர்பில் தனது நிறுவனத்தின் எதிர்ப்புகள் எதுவும் இல்லையெனவும் நீர்ப்பாசன பொறியியலாளர் (பதுளை) குழுவில் அறிவித்தார்.

## 2.11 அலவத்துகொட, திவுல்வத்த குளத்தை புனரமைத்தல் மற்றும் லுனுகொத்தாவல அணைக்கட்டை நிர்மாணித்தல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ ரவீந்திர சமவீர

### 2.11.1. அலவத்துகொட, திவுல்வத்த குளத்தை புனரமைத்தல் மற்றும் லுனுகொத்தாவல அணைக்கட்டை நிர்மாணித்தல்

குறித்த கருத்திட்டங்களின் தற்போதைய நிலை பற்றி குழுவில் அறிவிக்கப்பட்டது.

கௌரவ தவிசாளர், 2019 மார்ச் 30 ஆம் திகதியின்போது திட்டத்தை தலைமையகத்திற்கு அனுப்பிவைப்பதுடன் திவுல்வத்த குளம் மற்றும் கொத்தாவல அணையின் நிர்மாணிப்புப் பணிகளை ஆரம்பிக்குமாறும் பதுளை பிரதேச பொறியியலாளர், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் மற்றும் நீர்ப்பாசன மேலதிக செயலாளர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியனார்.

### 2.11.2. நுவரெலியா- கட்டுமான குளத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தினை துரிதப்படுத்தல்

கௌரவ உறுப்பினர், நுவரெலியா- கட்டுமான குளத்தின் கருத்திட்டப் பணிகள் தொடர்பில் வினவினார்.

கௌரவ தவிசாளர், கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களின் ஒருங்கிணைப்புடன் குறித்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.12 வாழைச்சேனை துறைமுகம்சார்ந்த கருத்திட்டப் பணிகளைத் துரிதப்படுத்தல்- கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்**

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத் தளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பூரண சாத்தியவள ஆய்வொன்றை நடாத்தவதற்கான ஆலோசனை சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கருத்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

**2.13 இறால் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வளித்தல்- கௌரவ அமீர் அலி சிஹாப்தீன் அவர்கள்**

இறால் இனப்பெருக்க நிலையங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளபோதிலும் இறால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு இறால் இனப்பெருக்க நிலையத்திலிருந்து மட்டுமே இறால் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதால் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் எடுத்துக்கூறினார்.

மட்டக்களப்பைத் தவிர்ந்த ஏனைய இனப்பெருக்க நிலையங்களில் இருக்கும் இறால்களுக்கு வெள்ளைக் கழிவு நோய் ஏற்பட்டுள்ளதால் சில அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவில்லையென தேசிய நீரக உயிரினங்கள செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் தொடர்பில் ஆராயுமாறும் வாழைச்சேனையிலுள்ள 60 இனப்பெருக்க நிலையங்கள் பற்றி ஆராய்ந்து விவசாய செயலாளருக்கு அறிக்கையிடுமாறும் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.14 வைரஸ் நோயினால் மாடுகள் இறந்த மாட்டுப் பண்ணை உரிமையாளர்களுக்கு நட்டஈடுகளை வழங்கல்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரேமுறையில் பெருமளவு எண்ணிக்கையான மாடுகள் இறந்துள்ளதால் உரிமையாளர்களுக்கு நட்டஈடுகளை வழங்கல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

ஹிமொரெஜிக் செப்ரிசீமியா என்ற நோயினால் மாடுகள் இறந்துள்ளதாகவும், மாடுகள் காப்புறுதி செய்யப்படில்லாதவிடத்து நட்டஈடுகளை வழங்க முடியாதெனவும் விலங்குகள் உற்பத்திகள் மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகம் டாக்டர் நிஹால் வெதசிங்க அறிவித்தார்.

விவசாய காப்புறுதிச் சபையில் விலங்குகளை காப்புறுதிச் செய்யும் திட்டமொன்று இருப்பதாவும் , அது தொடர்பான நடபடிமுறைகளை இவ்வருடம் மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**2.15 மாடுகளுக்கான மேய்ச்சல் தரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

கின்னியா பிரதேசத்தில் மாடுகளுக்கான மேய்ச்சல் தரைகள் பற்றாக்குறையாக இருப்பதாக கௌரவ உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

**2.16 மீன்பிடி உபகரணங்கள் மீதான வரியை நீக்குதல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ நிஹால் கலப்பத்தி**

### 2.16.1. மீன்பிடி உபகரணங்கள் மீதான வரியை நீக்குதல்

மீன்பிடி உபகரணங்கள் தொடர்பில் வரி விதிக்கப்படுவதால் மீனவர்கள் மீன்பிடிக் கைத்தொழிலிருந்து நீங்கும்நிலை ஏற்படுவதால் வரி விதிப்பினைக் கட்டுப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். மேலதிக மதிப்பீடுகளைக் கொண்டு ஊழியர்களுக்கான சம்பளம் செலுத்தப்படுவதற்கு மாறாக மீன்பிடித் துறைசார்ந்த வளங்களை உச்சநிலையில் பயன்படுத்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் எடுத்துக்கூறினார்.

அதற்காக இம்முறை வரவு செலவுத்திட்டப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கொரிய கம்பனியொன்றுடன் கலந்தாலோசித்து மிரிஸ்ஸ, தங்காலை, மாதகல, தெலே மற்றும் உடப்புவ ஆகிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக இளைஞர் சமூகத்தை சுற்றுலா,கடற்றொழில் மற்றும் வாணிப துறைகளில் ஈடுபடச் செய்வதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மீனவர்கள் தொடர்பில் “என்ரபிரைஸ் சிறீலங்கா” கருத்திட்டத்தின் ஊடாக 6.3 சதவீத வட்டியின் கீழான கடன் வழங்குவதாகவும் படகுகளையும் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சலுகைகளை வழங்க முடியுமெனவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 2.16.2. குளிரூட்டிகளை புனரமைக்கும் செயற்றிட்டமொன்றை ஆரம்பித்தல்

தூர இடங்களுக்கு மலிவு விலைக்கு மீன் வழங்குவதற்காக துறைமுகப் பிரதேசங்களைச் சார்ந்த குளிரூட்டிகளை அமைக்கும் திட்டமொன்றை ஆரம்பித்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தற்போதுள்ள குளிரூட்டிகளை புனரமைப்பதற்காக கொரிய கம்பனியொன்றுடன் இணைந்து செயற்பட்டுவருவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் குழுவில் அறிவித்தார்.

### 2.16.3. நங்கூரத் தளங்களை அபிவிருத்தி செய்தல்

நாட்டில் மீன்பிடித்துறைமுகங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக சில நங்கூரத் தளங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இவ் ஆண்டில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வேலைகளை ஆரம்பிப்பதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அத் திட்டம் வெற்றியளிக்குமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 2.16.4. மீனவர்களுக்கான காப்புறுதி முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்

மீனவர்களுக்கான காப்புறுதி முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அதிகமானவர்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளார்களெனவும் அந்நிறுவனம் பிரதிலாபங்கள் வழங்குவதைக் மட்டுப்படுத்தியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குழுவிலி அறிவித்தார்.

குறிப்பிட்ட பிரச்சினைகளை அடையாளம் கண்டு, மீனவர்களையும் படகுகளையும் காப்புறுதி செய்யக்கூடிய காப்புறுதி முறைமையொன்று தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

**3.** ஒத்திவைப்பு:- குழு பி.ப.4.05 மணிக்கு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

## கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

### முதலாவது கூட்டம் - 2019 மார்ச் 15

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ றிஸாட் பதியுதீன் (தவிசாளர்)
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ ஏ.டி. பிரேமதாச
கௌரவ கே.கே. பியதாஸ

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌவர அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

**விடுமுறை பற்றிய பிரேரணைகள்**
கௌரவ சிறிபால கமலத்
கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா

**1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

**1.1 அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிசார்ந்த நட்டங்கள்- கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா அவர்கள்**

கடந்த ஆண்டுகளில் பல்வேறு அரச நிறுவனங்கள், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கடன் அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொண்டு அதற்கான நிதியைச் செலுத்தத் தவறியுள்ளதால் அந் நிறுவனத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

சனாதிபதி செயலகம், மாவட்ட செயலகம்- கம்பஹா, சௌம்மியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்கள் 115 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களைப் பெற்றுக்கொண்டுள்ளதால் அந்நிதியை அறவிடுவதற்காக அமைச்சரவை திர்மானத்துக்க மைய நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் இரு வாரங்களுக்குள் திருப்தியான பதில் கிடைக்காதவிடத்து மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.2 மத்திய மாகாணத்தில் மீண்டும் நெசவுக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்- கௌரவ கே.கே.பியதாச**

**1.2.1. மத்திய மாகாண நெசவுக் கைத்தொழில்**

மத்திய மாகாணத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள நெசவுக் கைத்தொழிலை மேம்படுத்துவதன் ஊடாக அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் பற்றிய அறிக்கையொன்றை 2019 ஏப்பிறல் 05 ஆம் திகதியின்போது பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 1.2.2. கூட்டுறவு வாக்கெடுப்பின்போது ஏற்பட்ட ஊழல்கள்

கூட்டுறவு வாக்கெடுப்புகள் வெளிப்படையின்றி நடாத்தப்படுவதாகவும், பல்வேறு ஊழல்களும் முறையற்ற நிதி கொடுக்கல்வாங்கல்களும் இடம்பெற்றுவருவதாகவும் குறிப்பிட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள், அது தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

கூட்டுறவு வாக்கெடுப்புகளை வெளிப்படையான முறையில் நடத்துமாறு மாகாண ஆணையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 1.2.3. புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள்

பெருந்தோட்டத்துறை சார்ந்த பிரதேசங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களை திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளபோதிலும் அதற்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லையெனக் குறிப்பிட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள், அப்பிரதேசத்தில் கூ.மொ.வி. நிலையங்களை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

தோட்டங்களில் சம்பளம் வழங்கப்படும் நாளில் அல்லது வாரத்திற்கு ஒரு முறை வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நடமாடும் சேவைகளை நடாத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கௌரவ பிரதி அமைச்சர், அகலவத்த பிரதேசத்தில் கூ.மொ.வி. நிலையங்களை ஆரம்பிப்பதற்கான வர்த்தக ஆய்வுகளை (Market Survey) நடாத்தியபின் அங்கு கூ.மொ.வி.நிலையங்களை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூ.மொ.வி.நிலையத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

கௌரவ தவிசாளர், நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் கூ.மொ.வி.நிலையங்களை புதிதாக ஆரம்பிப்பதற்கு முன் வர்த்தக ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

## 1.3 பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி - கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

மருதானையில் அமைந்துள்ள டக்ளஸ் என்ட் சன்ஸ் கம்பனியினால் பொலநறுவை மாவட்டத்து விவசாயிகளுக்கு நெல் அருவடை செய்யும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவை சிலமாதங்களில் இயங்காதவிடத்து அவர்கள் அது பற்றி நுகர்வோர் சேவைகள் அதிகார சபைக்கு முறையீடு செய்துள்ளார்கனெவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

நுகர்வோர் சேவைகள் அதிகார சபை விவசாயிகள் தொடர்பில் நியாயமான தலையீட்டினை வழங்கத் தவரியுள்ளதாகவும் விடயம் தொடர்பில் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்குமாறும் கௌரவ தவிசாளர், நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேவையான தலையீடுகளை வழங்கக்கூடியவாறு அதிகார சபையின் சட்டப்பிரிவினை வலுப்படுத்துமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

நுகர்வோருக்கு சலுகையளிக்கும் வகையில் நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், நுகர்வோர் சேவைகள் அதிகார சபைத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் நுகர்வோர் சேவைகள் அதிகார சபையுடன் தொடைர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கமொன்றை பெற்றுக்கொடுப்பதன் மூலம் நுகர்வோருக்கு துரித விளைத்திறனுடைய சேவையை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

நுகர்வோர் பொருட்கள் தொடர்பிலான ஆய்வுகளை நடாத்துவதற்காக ஆய்வுகூடமொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், நுகர்வோர் சேவைகள் அதிகார சபைத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.4 இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு பில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகளை அமைச்சின் அலுவல்கள் தொடர்பில் கையாளுதல்**

கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பில்லியன் ரூபா நிதி ஏற்பாட்டினை அமைச்சின் அலுவல்கள் தொடர்பில் கையாளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.** கூட்டம் மு.ப.11.05 மணிக்கு, 2019.04.05 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

**பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதலாவது கூட்டம்- 2019 மார்ச் 19**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ ஆர்.எம்.ரன்ஜித் மத்துமபண்டார (தவிசாளர்)
கௌரவ அ.அரவிந்த் குமார்
கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ சுஜித் சங்ஜய பெரேரா
கௌரவ (கலாநிதி) எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில்

**1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

**1.1. சில பிரதேச செயலாளர்களுடன் இணைந்து செயற்படும் சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படல் - கௌரவ அ. அரவிந்த் குமார்**

அபிவிருத்தி வேலைகளின்போது பிரதேச செயலாளர்களுடன் இணைந்து செயற்படுவது மிகச் சிரமமாகவுள்ளதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். ஹபுத்தலை மற்றும் பதுளை பிரதேச செயலாளர்களின் சேவை மிகவும் வரவேற்கத்தக்கதாக இருப்பதாகவும் ஹல்தும்முல்ல பிரதேச செயலாளரின் ஒருங்கிணைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அது பற்றிய முறையீடொன்றை தனக்கு பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய 117 என்ற உடனடி தொலைபேசி இலக்கம் பற்றி பொது மக்கள் விழிப்பூட்டப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

## 1.2. அரச ஊழியர்களுக்கு அரசியலில் ஈடுபடும் உரிமை மீறப்படல் - கௌரவ அ.அரவிந்த் குமார்

அரச சேவையின் சில சேவைகளைச் சேர்ந்தவர்களுக்கு அரசியலில் ஈடுபடும் உரிமை மீறப்பட்டுள்ளதால் அறிவாளிகள் பாராளுமன்றத்திற்கு வரவுள்ள சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

தாபன விதிக் கோவைக்கு அமைய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அரசியலில் ஈடுபடும் உரிமை மீறப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் அறிவித்தார்.

## 1.3. பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு இலங்கை பொது நிருவாக சேவையின் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழஙகப்படாமை உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

### 1.3.1 பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு இலங்கை பொது நிருவாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமை.

பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கு 2008.08.29 ஆம் திகதியின் பின் பொது நிருவாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கலந்கொள்ளும் சந்தர்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அச் சந்தர்ப்பத்தை மீள பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பிரசுரிக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்களென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை தனக்கு பெற்றுத்தருமாறும் அது பற்றி அரச சேவைகள் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசிப்பதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.3.2 வில்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்படாமை

2017 ஆம் ஆண்டு வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்கள் 03 மாதங்களுக்குள் அவர்களது கோரிக்கைகளை முன்வைத்துள்ளபோதிலும் அவர்களுக்கு இதுவரை நட்டஈடுகள் செலுத்தப்படவில்லையென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

ஏதேனும் அனர்த்தம் நிலைகளின்போது அது பற்றி அறிவிக்குமாறு பிரதேச செயலாளருக்கும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்குமாறும், அனர்த்த நிலையின்பின் பின்பற்றப்படவேண்டிய நடபடிமுறைகள் பற்றிய கால சட்டகமொன்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

**1.4. பயிர்ச்சேதங்கள் தொடர்பில் நட்டஈடு வழங்கல்- கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

வறட்சியினால் ஏற்படும் பயிர்ச்சேதங்கள் தொடர்பில் நட்டஈடு வழங்கப்படும் பொறிமுறை பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

வறட்சியினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்கள் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பாதிப்புகள் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் நட்டஈடுகள் 7 தவணைகளில் வழங்கப்பட்டுள்ளதாக அந் நிலையப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

2016/17 இற்கு அமைய பெரும்போகம் பாதிக்கப்படல் தொடர்பில் ஒரு விவசாய குடும்பத்துக்கு நட்டஈடாக 10,000/- ரூபா வீதம் 523,000 குடும்பங்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வறட்சியினால் ஏற்படும் பயிர்ச்சேதங்கள் மற்றும் வாழ்க்கைத் தொழிற் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கு 2000/- அல்லது 2500/- ரூபா வீதம் உலர் உணவுக் கூப்பன்கள் 4 தவணைகளில் 2017 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

2018 மார்ச் மற்றும் ஏப்பிறல் மாதங்களில் இரு தவணைகளில் 4000/- அல்லது 5000/- ரூபா வீதம் உலர் உணவுக் கூப்பன்கள் 4 தவணைகளில் செலுத்தப்பட்டுள்ளது. 2018 நவம்பர் மாதம் தொடர்பில் ஒரு தவணைக்கான உலர் உணவுக் கூப்பன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் அறிவிக்கப்பட்டது.

**1.5. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களை மீள கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் - கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளால் கேகாலை உட்பட்ட ஏனைய மாவட்டங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

அனர்த்த நிலையின் பின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ள கிராமங்களை விரைவில் திறந்துவைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த கிராமங்களின் புனரமைப்பு அலுவல்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.6. அனர்த்த நிலையின்போது அரச நிறுவனங்கள் செயற்படுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கல்- கௌரவ நிஹால் கலப்பத்தி**

அரச விடுமுறை தினங்களில் ஏதேனும் அனர்த்த நிலை ஏற்படுமாயின் அது தொடர்பில் அரச நிறுவனங்கள் துரிதமாக செயற்படுவதற்கான திட்டமொன்று அமைக்கப்படும் தேவை பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் வினவினார்.

தற்போது அமைச்சின் கீழ் முப்படையின் ஒருங்கிணைப்புடன் 24 மணிநேர உடனடி அனர்த்த அறிவிப்பு நிலையங்கள் இயங்கிவருவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

ஏதேனம் அனர்த்த நிலையின்போது ஏற்படும் சொத்துக்கள் மற்றும் உயிர்ச்சேதங்கள் தொடர்பில் வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையை அதிகரிக்கும் இயலுமை பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துக்கு பங்களிப்பு நிதி வழங்குவதன் ஊடாக நட்டஈடுகள் வழங்கப்படும் முறை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

காலநிலை எதிர்வுகூறல்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் நல் அபிப்பிராயம் இல்லையெனவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

வளிமண்டலவியல் திணைக்களத்திடம் தற்போதுள்ள உபகரணங்கள், சர்வதேச ரீதியில் கிடைக்கும் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வானிலை எதிர்வுகூறல்கள் வெளியிடப்படுவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 2 வேறு விடயங்கள்

### 2.1 பொல்பித்திகம பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய பிரச்சினை

பொலிபித்திகம பிரதேச செயலகத்துடன் தொடர்புடைய பிரச்சினை பற்றி கௌரவ தவிசாளர் குழுவில் வினவினார்.

உலர் உணவுச் சீட்டுகளை வழங்கல் தொடர்பில் 2018 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் இரண்டு சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளபோதிலும் பொல்பித்திகம பிரதேச செயலாளர் இரண்டாம் சுற்றுநிருபத்துக்கு அமைய செயற்பட தவறியுள்ளதாகவும்

அதனால் அப்பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அரசாங்கக் கொள்கைக்கு அமைய வழங்கப்படும் நிவாரணங்கள் வழங்கப்பட்டில்லையெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த பிரதேச செயலாளருக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்வதுடன் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த நிவாரணங்கள் வழங்கப்படாத விசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 3 பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் அலுவல்கள் தொடர்பிலான கருத்தாய்வு

### 3.1 தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம்

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் தொடர்பில் செலுத்தப்படும் தவணைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் வழங்கப்படும் பிரதிலாபங்கள் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

காப்புறுதி பிரதிலாங்களை வழங்குவதற்காக அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் போதிய நிலையில் இல்லாத காரணத்தால் காப்புறுதி பங்களிப்பு நிதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்புகள் தொடர்பில் செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகையை அதிகரித்தல் பற்றி ஆராயப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு அனர்த்த நிலையின் பின் அதற்கான நட்டஈட்டுத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு பிரதேச செயலாளரால் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டபின் மதிப்பீட்டுத் தொகை திருத்தப்படுவது தொடர்பில் கௌரவ தவிசாளர் வினவினார்.

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அனர்த்தம் இடம்பெற்றுள்ள சில இடங்களுக்குச் சென்று இணைந்த விசாரணைகளை மேற்கொள்வதுடன் நட்டஈடுகளை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் மதிப்பீட்டுத் தொகை 25,000/- ரூபாவை விஞ்சும் சந்தர்ப்பத்தில் செலுத்தக்கூடிய நட்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கான பொறிமுறையொன்றைத் தயாரிக்கும் அவசியம் பற்றியும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

அத்துடன் அனர்த்த நிலையின்போது அனர்த்த நிவாரண சேவைகள் நிலைய உதவிப் பணிப்பாளர் செயற்படவேண்டிய முறையை விபரிக்கும் வகையில் பொறிமுறையொன்றை அமைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் ஊடாக நட்டஈடுகள் வழங்கப்படும்போதுஅது பற்றிய விளைத்திறனுடைய பொறிமுறையொன்றைத் தயாரித்து தனக்கு பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 3.2 வளிமண்டலவியல் திணைக்களத்து அலுவல்களின் மேம்பாடு

வளமண்டலவியல் திணைக்களத்தினை புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் அலுவல்களைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

### 3.3 தேசிய கட்டிட ஆராய்ச்சிகள் அமைப்பு

வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள வீடமைப்புகள் மற்றும் நிதி அங்கீகரிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை பற்றி கௌரவ தவிசாளர் வினவினார்.

நிலச்சரிவு மற்றும் வெள்ள அச்சுறுத்தல்கள் காணப்படும் பிரதேசங்களில் “பெரசவி” வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுவதாகவும் அவற்றுள் 1170 வீடுகளை கலுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் 800 மில்லியன் ரூபா செலவில் 400 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணிகள் இருப்பதாகவும் மேற்குறித்த திட்டம் தொடர்பில் அக் காணிகளை ஒதுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

குறித்த கருத்திட்டத்தின் அலுவல்களை விரைவில் ஆரம்பிக்குமாறு கௌரவ தவிசாளர், பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

அனர்த்தங்கள் மற்றும் நிலச்சரிவுகளைக் கட்டுப்படுத்தும் கருத்திட்டத்துக்கு சீன அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 110 டொலர் மில்லியன் வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந் நிதியைக் கொண்டு நெடுஞ்சாலைகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அண்மையில் உள்ள நிலச்சரிவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக பக்க மதில்களை நிர்மாணித்து வலுப்படுத்தும் முறைமையைப் பின்பற்றுவதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

### 3.4 ஓய்வூதிய திணைக்களம்

ஓய்வூதிய திணைக்களம் தொடர்பான அறிக்கையை துரிதமாக பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளர், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார். 90 சதவீதமானவர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் . கல்வி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கீழ் பணிபுரிந்துவரும் உத்தியோகத்தர்களின் பிரத்தியேக கோவைகள் சம்பந்தப்பட்ட

நிறுவனங்களால் இற்றைப்படுத்தப்படாத காரணத்தால் ஏனைய விண்ணப்பங்களை திருப்பியனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

45 வயதிற்குப் பின் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக நிறுவனத்தினால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் திணைக்களம் பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் குழுவில் குறிப்பிட்டார்.

## 3.5 அரச சேவையின் புதிய ஆட்சேர்ப்புகள்

**3.5.1** கௌரவ தவிசாளர், இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்புகள் சேவையின் புதிய பதவி நியமனங்கள் தொடர்பில் இணைந்த சேவையின் பணிப்பாளர் நாயகத்திடம் வினவினார். 911 பதவி வெற்றிடங்கள் இருக்கின்றபோதிலும் ஒரேயளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அதிக எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் இருப்பதால் 907 பேர் மட்டும் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதாகவும் அடிப்படை தகைமைகளுடைய எல்லோரையும் ஆட்சேர்ப்பு செய்வதாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

**3.5.2** வர்த்தமானியில் வெயிடப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் கணக்காளர்கள் பதவி தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்யப்படல், கணக்காளர் சேவையில் காணப்படும் பதவி வெற்றிடங்கள் மற்றும் மீண்டும் ஆட்சேர்ப்பு செய்யப்படல் தொடர்பில் கௌரவ தவிசாளர் வினவினார்.

பதவி நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரும் 200 வரையான வெற்றிடங்கள் இருந்துவருவதாக குழுவில் அறிவிக்கப்பட்டது. இரண்டாம் குழுவினை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழு இதுவரை தீர்மானமொன்றை வழங்கவில்லைன அறிவிக்கப்பட்டது.

**3.5.3** பொறியியல் சேவையைச் சேர்ந்த நியமனங்கள், பல்கலைக்கழகத்தினால் பட்டம் பெற்று வெளியேறும் தொடர் முறைக்கு பெற்றுக்கொடுக்க இயலாமைக்கான காரணம் தொடர்பில் கௌரவ தவிசாளர் வினவினார். பல்கலைக்கழகங்களின் தரங்கள் (G.P.A) ஒன்றுக்கொன்று பொதுவாக மாறுபடுதல், வேறு தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படல் ஆகிய காரணங்களால் திறன்களின் அடிப்படையில் வரிசைப்படுத்த முடியாதென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

ஒரு போட்டிப் பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் உள்ள சேவைகளின் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் முறை பற்றி கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 3.6 உற்பத்தித் திறன் செயலகம்

உற்பத்தித் திறன் பிரிவு சார்ந்த பிரச்சினைகள் பற்றி கௌரவ தவிசாளர் வினவினார். பிரிவுக் கல்விக் காரியாலயம் தொடர்பிலான விசேட செற்றிட்டமொன்றின் ஊடாக உற்பத்தித் திறன் பிரிவின் மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

**3.7 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்.**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவன அலுவல்களின் மேம்பாடு பற்றி கௌரவ தவிசாளர் வினவினார்.

தற்போது நிறுவனத்தினுள் மொத்த இடமும் உள்ளடக்கப்படும் வகையில் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டது. புதிதாக நியமனங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பில் நடாத்தப்படவுள்ள பயிற்சித் திட்டங்கள் தொடர்பில் குழுவில் எடுத்துரைக்கப்பட்டது.

**3.8** அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் கௌரவ தவிசாளர் வினவினார். புனர்வாழ்வளிப்புப் பிரிவிற்கு நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கு திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டில்லையெனவும் பொது நிருவாக உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**4.** குழு, பி.ப.12.50 மணிக்கு, 2019 மே மாதம் 23 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

**மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம் – 2019 மார்ச் 22**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க (தவிசாளர்)
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர
கௌரவ பிரசன்ன ரணதுங்க

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ மஹிந்த அமரவீர
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ இ.சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ எஸ்.எம்.மரிக்கார்
கௌரவ மலித் ஜயதிலக

**1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

**1.1 மீதொட்டமுல்ல கழிவுக்குவியல் கருத்திட்டம் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ எஸ்.எம்.மரிக்கார்**

**1.1.1. மீதொட்டமுல்ல கழிவுக்குவியல் கருத்திட்டம்**

மீதொட்டமுல்ல கழிவுக் குவியல் கருத்திட்டத்தின் தற்போதைய நிலை, கழிவுக் குவியல் விஸ்தீரணமடைந்துள்ள பிரதேசத்தில் நகரப் பூங்காவொன்றை அமைத்தபின் அதற்கருகில் நகரமொன்றை நிர்மாணிக்கும் இயலுமை, அனுமதியற்ற வதிவாளர்களை வேறு இடங்களில் குடியேற்றும் இயலுமை மற்றும் நிரந்தர உறுதியுடையவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 1200 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் 9 ஏக்கர் பரப்பளவில் நகரப் பூங்கா

அமைக்கப்பட்டுவருவதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். வதிவாளர்களை மீள் குடியமர்த்தல் தொடர்பிலான தகவல்களை சேகரித்துவருவதாக அவர் குறிப்பிட்டார்.

நிரந்தர வதிவாளர்களுக்கு அவர்களின் காணிகளின் பெறுமதிக்கு சமமான வகையில் வீட்டு அலகுகள் வழங்கப்படுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.1.2. மெகொட கொலொன்னாவ பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற நிர்மாணிப்புகள்

சிங்கபுர தொகுதியைச் சேர்ந்த மெகொட கொலொன்னாவ பிரதேசத்தில் பல அனுமதியற்ற நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.1.3. நாராஹேன்பிட்ட பிரதேசத்தில் நிலவிவரும் வாகன போக்குவரத்து நெறிசல்கள்

நாராஹேன்பிட்ட கிரிமண்டல மாவத்தை பிரதேசத்தில் முற்பகல் மற்றும் பிற்பகல் நேரங்களில் பலத்த வாகன போக்குவரத்து நெறிசல் நிலை காணப்படுவதாகவும் அதற்கான மாற்று வழிகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

நான்கு வழிகளைக் கொண்ட கிரிமண்டல மாவத்தையை விஸ்தரிப்பதற்காக நகர சபையுடன் இணைந்து பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் அவர்களால் குறிப்பிட்டவாறு மாற்று வழிகளை பயன்படுத்தல் தொடர்பில் ஆராயுமாறு கௌரவ தவிசாளர், இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

தெகிவலை- ஹில் வீதியில் முற்பகல் மற்றும் மாலை நேரங்களில் நிலவிவரும் வாகன நெறிசல் நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக கடவத்தை மற்றும் கல்விஹாரை பாதைகளை இணைக்கும் சிறு பாலமொன்றை நிர்மாணித்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், அது பற்றிய பிரேரணையொன்றை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்வைக்குமாறு கௌரவ உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 1.2 மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டம்- கௌரவ பிரசன்ன ரணதுங்க

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டத்துக்கு முரணான வகையில் உள்ளூராட்சி அமைச்சினால் மினுவாங்கொடை நகர மத்தியில் மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணித்துள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.குறித்த இடத்தில் வேறு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டம் 10 வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்டதென நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார். மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டம் 2019 ஆம் ஆண்டு தயாரிக்கப்படவுள்ளதாகவும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் கௌரவ எட்வட் குணசேக்கர, கௌரவ பிரசன்ன ரணதுங்க, மினுவாங்கொடை நகர மேயர் ஆகியோருடனான கூட்டமொன்றை நடாத்துவதற்கு ஒழுங்குசெய்யுமாறு கௌரவ தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.3 இரத்மலானை, வேரஸ் கங்கை கருத்திட்டம் மற்றும் இரத்மலானை நவ நகர கருத்திட்டம்- கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

இரத்மலானை வேரஸ் கங்கை கருத்திட்டம் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

எப்பல்வத்த பிரதேசம் அதில் உள்ளடங்காதெனவும் பொல்கொட கால்வாயின் இடது பக்க பிரதேசம் மட்டும் கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் குழுவில் தெரிவித்தார். ஏனைய பிரதேசங்கள் உள்ளடக்கப்படும் வகையில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நுகேகொடையிலிருந்து கரதியான- கந்தவல வரையான பகுதி வேரஸ்கங்கை கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மொரட்டுவை பிரதேசம் லுனாவ கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் கந்தவல, கட்டுபெத்த பிரதேசம் எந்தவொரு கருத்திட்டத்திலும் உள்ளடங்காதெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார். அப்பிரதேசங்களுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும் அதற்கான நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டில்லையெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

இரத்மலானை நவ நகர கருத்திட்டம் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

இரத்மலானை மற்றும் தெமட்டகொட பிரதேசத்தில் புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான பயன்பாட்டில் இல்லாத அதிகளவான காணிகள் இருப்பதுடன் அவற்றை பெற்றுக்கொள்வது தொடர்பில் புகையிரத திணைக்களத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார். இரத்மலானை பிரதேசத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான காணி மற்றும் பெட்றிவத்த காணி ஆகியவை தொடர்பில் இரண்டு நகர வீடமைப்பு யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**1.4 பண்டாரகம வாகன போக்குவரத்து நெறிசல்- கௌரவ மலித் ஜயதிலக்க**

பண்டாரகம பிரதேசத்தில் நிலவிவரும் பலத்த வாகன போக்குவரத்து நெறிசலைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

பண்டாரகம பிரதேசத்தில் நிலவிவரும் வாகன போக்குவரத்து நெறிசலைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று வழியொன்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.பண்டாரகம நகர அபிவிருத்தித் திட்டத்தில் வீதி அபிவிருத்தியடன் இணைந்த ஹொரனை, கலுத்துறை மற்றும் பிலியந்தலை வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

வயற்காணிகளை சுவீகரித்தல் தொடர்பில் நட்டஈடுகளை செலுத்துவது பற்றி கௌரவ மலித் ஜயதிலக்க வினவினார்.

பொதுவாக நகரப் பிரதேசங்களில் ஒரு பர்சஸ் வயற்காணி தொடர்பில் 9000/- ரூபாவும் கிராமப்புரங்களில் 7000/- ரூபாவும் நட்டஈடாக செலுத்தப்படுவதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

## 1.5 அகுணகொலபெலெஸ்ஸ பிரதேசத்தில் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்படாத நிலையிலுள்ள வர்த்தக கட்டிடத்தொகுதி மற்றும் தங்காலை நகரத்தில் இடம்பெற்றுவரும் அனுமதியற்ற கட்டட நிர்மாணிப்புகள்-கௌரவ மஹிந்த அமரவீர

### 1.5.1. அகுணகொலபெலெஸ்ஸ வர்த்தக கட்டிடத்தொகுதி

அகுணகொலபெலெஸ்ஸ வர்த்தக கட்டிட தொகுதியின் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருப்பதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்ட மாவட்டத்து திஸ்ஸ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடத் தொகுதி, சூரியவெவ வர்த்தக நிலையம், பெரலிஹெல வர்த்தக நிலையம் ஆகிய கட்டிடங்கள் அடுத்துவரும் 2 மாதங்களுக்குள் திறந்துவைக்கப்படவுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.5.2. தங்காலை நகரத்தில் இடம்பெற்றுவரும் அனுமதியற்ற கட்டட நிர்மாணிப்புகள்

அனுமதியற்ற நிர்மாணிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் முறையான திட்டமொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தங்காலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 72 வர்த்தக நிலையங்கள் பற்றி கௌரவ தவிசாளர் வினவினார்.

வர்த்தக நிலையங்கள விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார். தங்காலை நகரம் தொடர்பிலான திட்டமொன்று விரைவில் செயற்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அனுமதியற்ற வர்த்தக நிலையங்கள் நீக்கப்பட்டபின் புதிய வர்த்தக நிலையங்களை பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 1.6 மன்னார் பொது விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளின் மேம்பாடு பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

இவ் விளையாட்டு மைதானத்தின் புற்தரை அமைக்கப்படும் ஒப்பந்தம் சரியான முறையில் நிறைவேற்றப்படாத காரணத்தால் அதனை மீளமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார். அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு இரவு நேரத்தில் விளையாடுவதற்காக மைதானத்திற்கு மின் விளக்குகளை பொறுத்த முடியுமெனவும் அதற்கான கட்டணங்களை செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை அமைத்துக்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

முல்லைத்தீவு பேரூந்து தரிப்பிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மன்னார் பேரூந்துத் தரிப்பிடத்தின் நிர்மாணப் பணிகள் ஜூன் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார். மன்னார் வர்த்தக கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை இன்னும் இரு மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய முடியுமென நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். வவுனியா வர்த்தக நிலையத்துடன் தொடர்புடைய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை இரு மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.7 விமானப் படையின் தீயணைப்பு அலகினை தாபிப்பதற்காக காணி வழங்கப்படாமை, கலுஓயா வெள்ளக்கட்டுப்பாட்டுக் கருத்திட்டத்தின் மேம்பாடு- கௌரவ லசந்த அலகியவன்ன**

**1.7.1. விமானப் படையின் தீயணைப்பு அலகினை தாபிப்பதற்காக காணி வழங்கப்படாமை**

விமானப் படையின் தீயணைப்பு அலகிற்குத் தேவையான உபகரணங்கள் யாவும் இருக்கின்றபோதிலும் அந்த அலகினைத் தாபிப்பதற்குத் தேவையான காணியை நாராஹேன்பிட்ட பிரதேசத்தில் பெற்றுக்கொள்வது தொடர்பில் பிணக்குகள் காணப்படுவதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

காணியை அளப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட கடிதமொன்று விமானப் படைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேலதிக நிதி ஏற்பாடுகள் தொடர்பிலான பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கை தொடர்பில் திறைசேரியினால் நிதி வழங்கப்படாத காரணத்தால் இக் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.7.2. கலுஓயா வெள்ளக்கட்டுப்பாட்டுக் கருத்திட்டத்தின் மேம்பாடு**

வத்தளை- கலுஓயா வெள்ளக்கட்டுப்பாட்டுக் கருத்திட்டத்தின் சாத்தியவள ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் தற்போதைய நிலை பற்றியும் கௌரவ உறுப்பினர் வினவினார்.

கலுஓயா கருத்திட்டம் தொடர்பில் சாத்தியவள ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டபின் அடுத்த நடபடிமுறைகளை மேற்கொள்வதற்காக ஜய்கா கருத்திட்டத்திற்கு (JICA Project) பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் அது பற்றி கலந்தாலோசித்துவருவதாகவும் இலங்கை காணி மீட்டல் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (ஈரநில முகாமையாளர்) குழுவில் குறிப்பிட்டார்.

**1.8 மட்டக்களப்பு நகர அபிவிருத்தி அலுவல்கள்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

மட்டக்களப்பு மாநகர எல்லைப் பிரதேசத்திலுள்ள வீதிக் கட்டமைப்புகள் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அப்பிரதேசத்தில் அமைந்துள்ள நீர்தோற்றுவாய்க்கு ஊடாக பயணம் செய்வதற்கு வசதியாக பாலமொன்றை நிர்மாணிக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சின் திட்டமிடலுக்கு அமைய மட்டக்களப்பு நகரம் முறையான நகரமாக கட்டியெழுப்பப்படவுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார். விசேடமாக யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு நகரங்களை Strategic City நிலைக்கு கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

சத்துருகொண்டான் நகரப் பூங்கா, மட்டக்களப்பு நகர பேரூந்து நிலையம் ஆகியவை மட்டக்களப்பு நகரத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்களெனவும், அடுத்த வருடம் இம் மாவட்டத்தின் வர்த்தகக் கட்டிடத் தொகுதி உட்பட்ட பல கருத்திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

**2.** குழு, பி.ப.4.00 மணிக்கு, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதலாவது கூட்டம் - 2019 மார்ச் 26

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**

கௌரவ சாகல ரத்நாயக்க (தவிசாளர்)
கௌரவ அப்துல்லா மஹரூப்
கௌரவ சமல் ராஜபக்ஷ
கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ முஹம்மது நசீர்

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி
கௌரவ மஹிந்த அமரவீர
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ இ.சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ ஹேசா விதானகே
கௌரவ (கலாநிதி) எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில்

### 1. தவிசாளரின் அறிவித்தல்கள்

### 1.1 காலி துறைமுக அபிவிருத்தி அலுவல்களின் மேம்பாடு- கௌரவ சந்திம வீரக்கொடி

காலி துறைமுக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிற்றளவிலான செயற்பாடுகள் மற்றும் மக்கள் போக்குவரத்திற்கான தளமொன்றை (yacht Marina) நிர்மாணிக்கும் பணிகளின் மேம்பாடு பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

கருத்திட்டத்திற்கான பிரேரணைகள் கோரப்பட்டு (Request for Proposals) அவை மதிப்பிடப்பட்டுள்ளபோதிலும் அதனால் எழுந்த பிரச்சினை காரணமாக நிலையியல் குழுவினால் மீண்டும் கருத்திட்ட யோசனைகளை (RFP) புதிதாக கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

காலி துறைமுகத்தின் உள்ளே அமைந்துள்ள சீமேந்துத் களஞ்சியசாலையினால் மேற்குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

பழைய சீமேந்துக் களஞ்சியசாலையொன்று இருப்பதாகவும் அத்துடன் சிறிய அறைக்கும் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான இயந்திரசாதனங்கள் பொறுத்தப்பட்டுள்ளபோதிலும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டில்லையெனவும் துறைமுக அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் திரு. சுசந்த அபேசிறிவர்தன குறிப்பிட்டார்.

மேற்குறித்த நடவடிக்கைகளினால் அப்பிரதேச சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் ரூமஸ்சகல பிரதேச சுற்றாடலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

தற்போதைய கைத்தொழிற் தரத்திற்கு அமைய தொழற்சாலையைச் செயற்படுத்துவதற்கு அந்நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் சீமேந்துத் துகள்களை இறக்கும் சந்தர்ப்பத்தில் எழும் தூசைக் கட்டுப்படுத்துவதற்கான

உபகரணமொன்றை (Dedusting Hoppers) பயன்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம பொறியியலாளர் குறிப்பிட்டார்.

இலங்கை முதலீட்டுச் சபையினால் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் ஊடாக எதிர்ப்பார்க்கப்படும் தரம் பற்றி குறித்துரைக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றாடல் செயற்பாட்டுத் திட்டமொன்றை முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய செயற்படத் தவறுமிடத்து அதனை இடைநிறுத்தவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

அது பற்றிய பூரண அறிக்கையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 1.2 கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்தல்- கௌரவ காஞ்சன விஜேசேகர

2014 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட , கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை புதிய இயந்திரசாதனங்களைக் கொண்டு அபிவிருத்தி செய்யும் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால் துறைமுக அதிகார சபைக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள், அப்பணிகளை மீண்டும் ஆரம்பித்தல் தொடர்பில் வினவினார். கிழக்கு முனையத்தின் செயற்பாட்டு அலுவல்கள் Colombo International Container Terminal Limited (CICT) கம்பனிக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் கௌரவ உறுப்பினர் வினவினார்.

குறித்த விடயம் பற்றி இலங்கை துறைமுக அதிகார சபையினால் கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாகவும் ஜப்பான் நாட்டிடமிருந்து குறைந்த வட்டியுடனான நிவாரண அடிப்படையில் கடன்களைப் பெற்றுக்கொண்டு முக்கிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவை ஒரு செயற்பாட்டுக் கம்பனியின் ஊடாக நிருவகிக்கப்படுமெனவும் செயற்பாட்டு அலுவல்களின் 51% துறைமுக அதிகார சபையினாலும், 49% இந்தியா மற்றும் ஜப்பான் ஊடாக நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

சீஐசீடி தனியார் கம்பனியின் சேவைக்காலம் நீடிக்கப்படல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 35 வருடங்களெனவும் அது 2011 ஆம் ஆண்டு முதல் வலுப்பெறுமெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

சவுத் ஏசியா கேட்வே டர்மிடல் லிமிடெட் (SAGT) கம்பனி 15 சதவீத பங்குகள் இலங்கை அரசாங்கத்துக்கு உரித்தாகும் விதத்தில் துறைமுக தளமொன்றை குத்தகைக்கு வழங்கியுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி அலுவல்கள் நீடகாலமாக பின்தங்கிய நிலையில் இருந்தபோதிலும் உத்தேச எதிர்கால அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்கும் நாட்டுக்கும் விளைத்திறனுடைய சேவையை வழங்க முடியுமென கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.3 கதிர்காமம் நகரத்தை அபிவிருத்தி செய்வதுடன் அங்கு நிலவிவரும் நீர் பிரச்சினைக்கு தீர்வளித்தல்- கௌரவ ஆனந்த குமாரசிறி**

கதிர்காமம் நகரத்தை முறையாக அபிவிருத்தி செய்வதுடன் அங்கு நிலவிவரும் நீர் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

தென் அபிவிருத்தி அதிகார சபையை தாபிக்கும் சட்டம் இதுவரை அங்கீகரிக்கப்படாத காரணத்தால் அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பில் அமைச்சுக்கு நேரடியாக பங்களிப்பு வழங்க முடியாதெனவும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

தெற்கு அபிவிருத்தி அமைச்சினால், நகர அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றைச் செயற்படுத்துவதாகவும் முக்கியமாக கதிர்காமம் செல்லும் யாத்திரிகளின் நலநோன்புகை தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன்

தற்போது தெமட்டகமுவ குளத்தை அண்டிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளைக் கொண்டு இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.4 அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்றை தாபித்தல்-கௌரவ சந்திம வீரக்கொடி**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்றை தாபித்தல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை தாபிப்பதால் உப்பளத்திற்கும் பறவைகள் சரணாலயத்திற்கும் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய சுற்றாடல் மதிப்பீட்டறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பிலும் கௌரவ மஹிந்த அமரவீர வினவினார்.

துறைமுகம் சார்ந்த கைத்தொழில் பேட்டை தொடர்பில் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதாகவும் அம்பாந்தோட்டை எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பில் பிரிதொரு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் குறிப்பிட்டார்.

நீர் பற்றாக்குறை நிலவிவருவதால் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தோல் பதப்படுத்தும் நிலையம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளதாக கௌரவ சந்திம வீரக்கொடி குழுவில் தெரிவித்தார்.

குடிநீர் தேவைகள், விவசாயம் மற்றும் துறைமுக கைத்தொழில் பேட்டை ஆகியவை தொடர்பில் நீர் பிரச்சினை பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதால் கிங்- நில்வலா யோசனைத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அதன் சாத்தியவள அறிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார் .

மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு முன்னுரிமை வழங்குமாறு கௌரவ மஹிந்த அமரவீர கேட்டுக்கொண்டார்.

கிங்- நில்வலா கருத்திட்டம் காலி மாவட்டத்துக்கு ஊடாகச் செல்வதால் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி கலந்லோசிப்பதற்கான கூட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறும் கௌரவ சந்திம வீரக்கொடி கேட்டுக்கொண்டார்.

சம்பந்தப்பட்ட தரப்பினரை அக் கூட்டத்திற்கு அழைக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.5 ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால் காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்- கௌரவ முஹம்மது நசீர்**

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால் காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதுடன் ஒலுவில் துறைமுகத்தை புனரமைக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கெண்டார்.

ஒலுவில், நிந்தவூர், இரட்டபலம் பிரதேசங்களிலுள்ள வயற்காணிகளும் நிலங்களும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் அப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அப் பிரதேச மக்களுக்கு நட்டஈடுகளை வழங்கல் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் அதன் பின் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வது பற்றி ஆராயப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.6 ஒலுவில் துறைமுகத்தின் குறைபாடுகளால் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள்- கௌரவ நிஹால் கலப்பத்தி**

ஒலுவில் துறைமுகத்தில் மணல் குவிதல், மீன்பிடிப் படகுகளுக்கு போதியளவு எரிபொருள் விநியோகிக்கப்படாமை, குடிநீர் பிரச்சினை மற்றும் ஐஸ் தொழிற்சாலை சரியான முறையில் இயங்காமை ஆகிய காரணங்களால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளதால் அவற்றுக்கு தீர்வளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றி ஆராய்வதற்கு முன் தொழில்நுட்ப ஆய்வொன்று நடாத்தப்பட வேண்டுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் பற்றி துறைமுக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் குழுவொன்று, அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளதாக பிரதி அமைச்சரினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

ஒலுவில் துறைமுகத்திலிருந்து அகழப்படும் மணல் மீண்டும் கடலில் போடப்பட வேண்டுமென கௌரவ நிஹால் கலப்பத்தி குழுவில் தெரிவித்தார்.

**1.7 துறைமுகப் பிரதேசத்தைச் சார்ந்த ரூமஸ்சல ஜன்கல் பீச் இனை முறையாக அபிவிருத்தி செய்தல்- கௌரவ சந்திம வீரக்கொடி**

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ரூமஸ்சல “ஜன்கல் பீச்” இனை முறையாக அபிவிருத்தி செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றி ஆராய்ந்து செயற்படுவதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

Yacht Marina தொடர்பில் முதலீட்டாளர்கள் ஊக்கத்துடன் இருப்பதால் அது தொடர்பில் நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

ரூமஸ்சல தொடக்கம் காலி வரைச் செல்லும் கேபல் கார் (Cable Car Service) சேவையொன்றை ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.8 ரூமஸ்சல ஜப்பான் சமாதான தூபிக்கு அருகில் அவுகன புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணியை விடுவித்தல்- கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

மேற்குறிப்பிட்ட அவுகன சிலையை நிர்மாணிப்பதற்குத் தேவையான துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணியை விடுவிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

சம்பந்தப்பட்ட விபரங்களை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் பணிப்புரை வழங்கினார்.

**1.9 முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்த இலங்கை துறைமுக அதிகார சபை உத்தியோகததர்களுக்கு பதவி நியமனங்களை வழங்கல்- கௌரவ நிஹால் கலப்பத்தி**

பாராளுமன்ற பணியாட்றொகுதியைச் சேர்ந்த சிலரின் துணைகளும் உள்ளடங்கும் குறித்த ஊழியர்களுக்கு 05 மாதங்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை நியமனங்கள் வழங்கப்பட்டில்லையெனவும் நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றி ஆராய்ந்து செயற்படுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.10 தற்காலிக மற்றும் அமைய அடிப்படையிலான ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கல்- கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் பணிபுரிந்துவரும் சாரதி மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைககளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அது பற்றி ஆராய்ந்து செயற்படுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.11 யுத்தநிலையின்போது முழுமையாக சேதமடைந்த முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கலங்கரை விளக்கத்தை புனரமைத்தல்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

யுத்தநிலையின்போது சேதமடைந்த முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கலங்கரை விளக்கத்தை நகர மத்தியில் தெரிவு செய்யப்பட்ட ஓரிடத்தில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தேவையான நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும்வரை அடிப்படை அலுவல்களை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.12 தலைமன்னார் தொடக்கம் இந்தியா வரையிலான கப்பல் சேவையொன்றை ஆரம்பித்தல்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

கடந்த காலங்களில் இருந்தவாறு தலைமன்னார் தொடக்கம் இராமேஸ்வரம் வரையிலான கப்பல் சேவையொன்றை ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவில் கரிக்கால் வரையிலான கப்பல் போக்குவரத்து சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் அதனுடன் இணைந்தவாறு தலைமன்னார் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறு துறைமுக அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

யுத்தகாலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்த வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த வதிவாளர்கள் அங்குள்ள முகாம்களில் வாழ்ந்துவருவதாகவும் அவர்களுக்கு தங்கள் பொருட்களுடன் இலங்கைக்கு வருவதற்கு வசதியாக மாதத்திற்கு ஒரு முறையாவது கப்பல் போக்குவரத்து சேவையை செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

கௌரவ தவிசாளர், அதற்கான கப்பலொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் இயலுமை பற்றி ஆராயுமாறும் வட மாகாண அபிவிருத்தி தொடர்பில் அமைச்சுடன் கலந்தாலோசிக்குமாறும் துறைமுக அதிகார சபைத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.13 தென் அபிவிருத்தி அதிகாரசபையினால் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்கள், கொடவில நவநகரம் மற்றும் மிரிஸ்ஸ சுற்றுலா வலயம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்- கௌரவ காஞ்சன விஜேசேக்கர**

கடந்த ஆண்டுகளில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் அபிவிருத்தி அலுவல்களின் மேம்பாடு மற்றும் கொடவில மற்றும் மிரிஸ்ஸ சுற்றுலா வலயங்களின் அபிவிருத்தி அலுவல்கள் காலதாமதம் அடைதல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

தெற்கு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கான அங்கீகாரம் பெறப்படாத காரணத்தால் மேற்குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொடவில நவ நகரத்தை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டுவர முடியாதெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

கொடவில மற்றும் மிரிஸ்ஸ அபிவிருத்தி வலயங்களின் அபிவிருத்தி அலுவல்கள் சுற்றுலா அபிவிருத்திச் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இருந்த காலி துறைமுக இல்லம், நிர்மாணிப்புகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதாகவும் மாத்தறை துறைமுகம் தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் இல்லையெனவும் தெற்கு துறைமுகச் சட்டம் (Southern Fort Act) என்ற பெயரில் புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக தென் மாகாண கோட்டையை அதன் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

(Colombo International Terminal Limited (CICT) தனியார் நிறுவனத்திற்கு அம் முனையங்களை விஸ்தரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாவென கௌரவ உறுப்பினர் வினவினார்.

அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டில்லையெனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டு அலுவல்கள் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**2.** குழு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**இரண்டாவது கூட்டம் - 2019 ஏப்ரில் 05**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ றிஸாட் பதியுதீன் (தவிசாளர்)
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ கே.கே. பியதாஸ

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ அஜித் பி. பெரேரா
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ ச.வியாழேந்திரன்
கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ ஈ. சரவணபவன்
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

**விடுமுறை பற்றிய பிரேரணைகள்**
கௌரவ சிறிபால கம்லத்

**1. கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்**

**1.1 இலங்கை அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிசார்ந்த நட்டங்கள்**

குறித்த விடயம் பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டபோதிலும் இதுவரை நிதியை அறவிட முடியவில்லையென அக் கூட்டுத்தாபனத் தலைவர் குறிப்பிட்டார்.

இதுவரை 109 மில்லியன் ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் இவ்வாரத்திற்குள் அதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரவைக்கு முன்வைக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன் முன்வைக்கப்பட்ட அமைச்சரைவை விஞ்ஞாபனத்தில் சனாதிபதி செயலகம், சௌம்மியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவை அதில் உள்ளடங்கியதாகவும் அமைச்சரவை ஆலோசனைக்கமைய அவர்களுடன் கலந்தாலோசிக்க முயன்றபோதிலும் பலனளிக்கவில்லையெனவும் அமைச்சின் பணிப்பாளர் திருமதி இந்திக்கா ரணதுங்க குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு இலங்கை அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.2 மத்திய மாகாணத்தில் மீண்டும் நெசவுக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

குறித்த விடயம் பற்றிய அறிக்கை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நெசவுக் கைத்தொழில் திணைக்களப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## 1.3 கூட்டுறவு வாக்கெடுப்பின்போது ஏற்பட்ட ஊழல்கள்

கூட்டுறவு வாக்கெடுப்புகளின்போது வெளிப்படையான முறையில் நடந்துகொள்ளுமாறு மாகாண ஆணையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக மேலதிக செயலாளர்(கூட்டுறவு அபிவிருத்தி) குழுவில் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாக குழுவில் அறிவிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் கையொப்பத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்பூட்டுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 1.4 புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள்

கடந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்ற பின் புதிதாக 10 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளதாகவும் விழாக் காலத்திற்கு முன் இன்னும் 06 நிறுவனங்கள் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் தோட்டத்துறை மக்களுக்காக பண்டிகை காலங்களில் நடமாடும் கூ.மொ.வி. சேவையை ஆரம்பிப்பதாகவும் கூ.மொ.வி. நிலையத் தலைவர் குறிப்பிட்டார் .

கட்டடங்களை வாடகைக்கு பெற்றுக்கொண்டபின் 16 வர்த்தக நிலையங்கள் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் கூ.மொ.வி. நிலையத் தலைவர் குறிப்பிட்டார் .அந் நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்யுமமாறு அமைச்சுக்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

விழாக் காலங்களில் புதிய வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் பின் ஆய்வுகளை நடாத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் கூ .மொ.வி. நிலையத் தலைவர் குறிப்பிட்டார்.

தவலம பிரதேசத்தில் புதிய கூ.மொ.வி. நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பதற்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் இரத்கம,வட்டவல, கினிகத்ஹேன மற்றும் வேறு சில பிரதேசங்களில் உள்ள நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான அறிக்கையிடப்படாத சொத்துக்கள் அனுமதியின்றி சுவீகரிக்கப்பட்டுவருவதாகவும் அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கௌரவ கே.கே.பியதாச அவர்கள் குழுவில் கேட்டுக்கொண்டார்கள்.

கௌரவ தவிசாளர் சம்பந்தப்பட்ட விபரங்களை துரிதமாக பெற்றுத்தருமாறு நெசவுக் கைத்தொழில் திணைக்கள பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

சலுசல நிறுவனத்தினால் சுவீகரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கலகெதர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆடைத்தொழிற்சாலை செயற்படுத்தப்பட்ட காணி ஒரு சுவீகரிக்கப்பட்ட காணியெனவும் தனிப்பட்ட முதலீட்டாளர் ஒருவர் எவ்வித கட்டணமும் செலுத்தாது அதனை பயன்படுத்தி வருவதாகவும், அக்காணி தொடர்பில் வாடகை செலுத்துமாறு சம்பந்தப்பட்டவருடன் கலந்தாலோசிக்கப்பட்டபோதிலும் அவர் அது தொடர்பில் இணக்கம் தெரிவிக்கவில்லையெனவும் சலுசல தலைவர் குறிப்பிட்டார்.

**1.5 மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் பற்றிய விடயங்கள்**

மத்திய மாகாணத்தில் கைத்தொழில் அமைச்சினால் நெசவுக் கைத்தொழில் சாலையொன்றை செயற்படுத்துவதற்காக அச் சொத்துக்களைப் பெற்றுத்தருமாறு கோரப்பட்டுள்ளதாக சலுசல தலைவர் குழுவில் தெரிவித்தார்.

அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் அதனை பயனுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றுக்காக பயன்படுத்த முடியுமெனவும் கொள்முதல் செய்யப்பட்ட அச் சொத்தை பிரதேச செயலாளருக்கு வேறு தரப்பினருக்கு சாற்ற முடியாதெனவும் அமைச்சின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய அமைச்சரவை செயலாளருடன் கலந்தாலோசித்த பின் உகந்த தீர்மானமொன்றுக்கு அமைய செயற்படுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளரக்கு ஆலோசனை வழங்கினார். சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வர்த்தக திட்டமொன்றைப் (Business Plan) பெற்றுக்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

**1.6 பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி-கௌரவ அநுர சிட்னி ஜயரத்ன**

நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலையீட்டுடன் குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் தொடர்பில் கௌரவ தவிசாளர் விளக்கமளித்தார்.

சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் நுகர்வோர் சேவைகள் அதிகார சபை உத்தியோகத்தர்களின் தலையீடிருந்தபோதிலும் இதுவரை விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு அளிக்கப்படவல்லலையெனவும் கௌரவ உறுப்பினர் எடுத்துரைத்தார். உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் பதிலளிக்கப்படவுள்ளதால் அது பற்றி ஆராய்ந்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**1.7 இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு பில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள்**

புதிதாக கைத்தொழில் பேட்டையொன்றை நிர்மாணிப்பதற்கான நிளஅளவை திட்டம், மதிப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன்வைப்பதற்குத் தேவையாயின் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2. வேறு விடயங்கள்**

**2.1. கைத்தொழில் பற்றிய கொள்கைகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் - கௌரவ புத்திக பத்திரண**

கைத்தொழில் பற்றிய கொள்கைகளைத் தயாரித்தல், சட்டமாக்கல், கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களைத் மேற்கொள்ளல் மற்றும் தகவல் கருமபீடமொன்றைத் தாபிப்பதன் ஊடாக கைத்தொழில் கொள்கையினை துரிதமாக விரிவுபடுத்தும் அவசியம் எழுந்துள்ளதாக கௌரவ பிரதி அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

இதுவரை 17 ஆலோசனைக் குழுக்கள் இருப்பதாகவும் அவை மீள வலுப்படுத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார். கைத்தொழில் பற்றிய கொள்கைகள் அமைக்கப்படும்போது துறைசார்ந்த கைத்தொழில் கொள்கைகளைத் தயாரித்தல் மிகவும் விளைத்திறனுடையதெனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

அதேபோல் கைத்தொழில் ஆலோசனைக் குழுக்களில் திருத்தங்கள் அடுத்த வாரத்தின்போது பூர்த்தி செய்யப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பட்டார்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் அதற்கமைய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

அதற்கமைய பிரதி அமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அமைச்சுகளைக் கொண்ட விசேட குழுவொன்றை நியமிப்பதுடன் சிபாரிசுகளை முன்வைக்குமாறு பணிக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

திறன்கள் அபிவிருத்திக் கற்கை மற்றும் கைத்தொழிற் துறை என்பவற்றை ஒன்றாக இணைப்பது அவசியமானதென அமைச்சின் செயலாளர் குழுவில் அறிவித்தார்.

அதனை செயற்படுத்தக்கூடிய முறை பற்றிய திட்ட வரைபொன்றை இரு வாரங்களுக்குள் தயாரிக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.2. கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருதல்

கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தப்பட வேண்டிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டு அது பற்றிய அமைச்சரவை விஞ்ஞாபன வரைபொன்று அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு ஆணையாளர் குழுவில் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ஆவணங்களை சட்ட வரைபாக்கல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கௌரவ பிரதி அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

கூட்டுறவு வாக்கெடுப்பு முறைகள் நடாத்தப்பட வேண்டிய சரியான முறை பற்றிய விபரங்கள் புதிய சட்டமூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ கே.கே.பியதாச கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவுச் சங்கங்களின் ஆண்டறிக்கைகளை அரச கணக்குகள் பற்றிய குழுவிற்கு முன்வைக்கப்பட வேண்டுமென கௌரவ பிரதி அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

பிரதி அமைச்சரின் தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதாகவும், அதன் அறிக்கை விரைவில் முன்வைக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

கைத்தொழில் கொள்கையைத் தயாரித்தல் மற்றும் கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தும்போது கூட்டுறவு வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய சரியான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபையை தெரிவு செய்யும்போது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் அல்லாத வெளி நபர்களை பெயர் குறிப்பிடுவதாக கௌரவ அநுர சீட்னி ஜயரத்ன அவர்கள் குழுவில் தெரிவித்தார்கள்.

கைத்தொழில்களை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் Single Window முறையை அறிமுகப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன்

கலந்தாலோசித்து தீர்மானிக்கக் கருதுவதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

வர்த்தக இடாப்பொன்றை (Business Regisrty) தயாரிப்பதற்காக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதால் அமைச்சின் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.3. சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவுகூறும் அலுவல்களின் மேம்பாடு - கௌரவ புத்திக பதிரண**

2019 யூலை மாதம் 07 ஆம் திகதி தென் மாகாண சனத் ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் கூட்டுறவு சர்வதேச தின விழாவை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கூட்டுறவு ஆணையாளர் குழுவில் தெரிவித்தார்.

**2.4. உத்தியோகத்தர்கள் யாவரும் புதன்கிழமைகளில் அலுவலகங்களில் கடமைகளில் ஈடுபடல்**

உத்தியோகத்தர்கள் அலுவலகங்களில் இல்லாதபோது அவர்களின் பணிகளை அனவல் செய்யக்கூடிய பிரதியொருவரை நியமிக்குமாறும் அவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

வெளியாட்டு பயணங்கள் தொடர்பில் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைய போதிய கால எல்லைக்குள் முன்வைக்கப்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

**2.5. கிரான் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த புதுகுடியிருப்பு, வாழைச்சேவை ஆகிய பிரதேசங்களின் அபிவிருத்தி அலுவல்கள்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்கள்**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வாழைச்சேனை, செங்கலடி, சந்திவேலி ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமொன்றை தாபிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

3000 சதுர அடி அளவிலான இடத்தைப் பெற்றுத்தந்தால் ஆரயம்பதி மற்றும் கிரான் பிரதேசங்களில் இரண்டு கூ.மொ.வி. நிலையங்களைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென கௌரவ தவிசாளர் தெரிவித்துக்கொண்டார்.

கும்புருமுல்ல பிரதேசத்தில் அச்சகம் தாபிக்கப்பட்டிருந்த கட்டிடம் யுத்தகாலத்தில் சேதமடைந்திருப்பதால் அவ்விடத்தில் மீண்டும் அச்சகமொன்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தேவபுரம் பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த அரிசி ஆலை யுத்தகாலத்தில் சேதமடைந்திருப்பதால் அவ்விடத்தில் மீண்டும் அரிசி ஆலையொன்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

சித்தாண்டி என்ற இடத்தில் பாற் தொழிற்சாலையொன்றை தாபிப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு கமத்தொழில் அமைச்சர் இணக்கம் தெரிவித்திருப்பதால் அதற்கான உதவிகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கலுவங்கேனி பிரதேசத்தில் டின்மீன் தொழிற்சாலையொன்றை தாபிப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருப்பதால் அதற்கான உதவிகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கூலாவடி பிரதேசத்தில் அரிசி ஆலையொன்றைத் தாபிப்பதற்காக பிரதேச செயலாளரின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதால் அது தொடர்பில் ஒத்துழைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

பதுளை வீதியிலும் கதிரவேலி பிரதேசத்திலும் இதற்கு முன் இரண்டு ஓட்டுத் தொழிற்சாலைகள் தாபிக்கப்பட்டிருந்ததாகவும் ஓட்டுத்தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிப்பதற்குத் தேவையான காணிகளை அப்பிதேசத்தில் பெற்றுக்கொடுக்க முடியுமெனவும் அத்துறையில் பயிற்சிபெற்றவர்களும் அப்பிரதேசத்தில் இருப்பதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

கதிரவேலி- வாகரை, ஏறாவூர்- இலுப்படிச்சேனை ஆகிய பிரதேசங்களிலும் ஓட்டுத் தொழிற்சாலைகளைத் தாபிப்பதற்குத் தேவையான வசதிகளை செய்துதருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

வாகரை, வாழைச்சேனை, கிரான், கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி மற்றும் வவுனதீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் அக் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.6. அமைச்சுக்கு சொந்தமான காணி

கொட்டஹேன, இல.05, சிறீகுணானந்த வீதி, கொழும்பு 13 என்ற இடத்தில் அமைச்சுக்கு சொந்தமான 13 பர்சஸ் பரப்பளவுடைய காணி மேல்மாகாண கூட்டுறவு அமைச்சுக்கு சொந்தமானதென கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார்.

## 2.7. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயற்சி அதிகார சபை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை -கௌரவ சந்திம வீரக்கொடி

### 2.7.1. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயற்சி அதிகார (NAITA) சபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 24 உழியர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படல்

ஆட்சேர்ப்பு நடபடிமுறைக்கு அமைய ஒப்பந்த அடிப்படையில் நைடா (NAITA) நிறுவனத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 24 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாது தொழிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்டவர்களின் ஒப்பந்த காலம் 03 மாதங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி நெருக்கடி காரணமாக அவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்க முடியாதுள்ளதாகவும் அது தொடர்பிலான கௌரவ அமைச்சரின் ஆலோசனைகளை எதிர்ப்பார்த்திருப்பதாகவும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயற்சி அதிகார சபையின் தலைவர் குழுவில் தெரிவித்தார்.

அது பற்றி ஆராய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 2.7.2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்பட்டுவரும் பயிற்சிப் பாடநெறிகள்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திவரும் பல சுற்றுலா பயிற்சிப் பாடசாலைகள் இருக்கின்றபோதிலும் அவற்றின் முகாமைத்துவ அலுவல்களை நிர்வகிப்பதற்காக சுற்றுலாத்துறை தொடர்பிலான நிபுணத்துவர்கள் நியமிக்கப்பட்டில்லையெனவும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் பணிபுரிந்துவருவதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார். ஆளணிக்கான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டு அத்துறை தொடர்பில் அறிவுள்ள ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

தேவையான ஆளணிக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கீகாரம் கிடைக்கும்வரை அத்துறையில் நிபுணத்துவர் ஒருவரை நியமிக்க முடியாதெனவும் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் குழுவில் குறிப்பிட்டார்.

கைத்தொழில் பயிற்சித் துறைக்கு தகுந்த முறையில் நிபுணத்துவரின் சேவையை பெற்றுக்கொடுப்பதாக பிரதி அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

## 2.8. இரைகம்புர கைத்தொழில் வலயத்தின் அபிவிருத்திப் பணிகள் உட்பட்ட வேறு விடயங்கள்- கௌரவ அஜித் பீ. பெரேரா

### 2.8.1. இரைகம்புர கைத்தொழில் வலயத்தின் அபிவிருத்திப் பணிகள்

கலுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த இரைகம்புர கைத்தொழில் வலயத்தின் காணிக்கான நிருவாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கோள்ளும்வரை அலுவல்களை ஒத்திவைக்காது 25 ஏக்கர் பரப்பளவுடைய காணியின் அபிவிருத்தி பணிகளை ஏனைய செயற்பாடுகளுடன் இணைத்து துரிதமாக மேற்கொள்ளுமாறு கௌரவ அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியுமான வகையில் அக் காணியை கூடிய விரைவில் முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

முதலீட்டாளரின் முதலீடுகளுக்கு அமைய ஒரு அல்லது சில காணி துண்டுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

காணித் துண்டுகளைப் பெற்றுக்கொடுத்தபின் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும், மாற்றங்களைச் செய்யவோ வேறு நபர்களுக்கு விற்பனை செய்யவோ முடியாதெனவும் 3-6 மாதங்களுக்குள் முதலீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவாறு காணிகளைப் பெற்றுக்கொடுக்குமாறும் கௌரவ தவிசாளர், பணிப்பாளர்(கைத்தொழில் அபிவிருத்தி) இற்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.8.2. ஹொரனை-இங்கிரிய பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்காவொன்றை (IT Park) நிர்மாணித்தல்

அது தொடர்பில் முதலீட்டாளர்களின் முக்கிய தேவையாகக் கருதப்படும் எண்ணக்கரு பத்திரமொன்று (concept Paper) தயாரிக்கப்பட வேண்டுமெனவும், பொருத்தமான வதிவிடயங்கள், விளையாட்டு மைதானங்கள், திரைப்பட மாளிகைகள், குடிபான

நிலையங்கள் மற்றும் சாதகமான சுற்றாடல் ஆகியவை அதில் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கான எண்ணக்கரு பத்திரமொன்று (concept Paper) இதுவரை தயாரிக்கப்பட்டில்லையென மேலதிக செயலாளர்(கைத்தொழில் அபிவிருத்தி) திரு. பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தான் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதாக கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

ICT நிபுணர்கள் மற்றும் கைத்தொழில் நிபுணர்கள் ஆகியோருடனான இது பற்றிய கருத்தாய்வொன்றை நடத்துவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் தொடர்பில் பங்களிப்பு வழங்கும் இயலுமை தொடர்பில் கைத்தொழில் தொழில்நுட்பவியல் பற்றிய பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் திரு. ஜீ.எல்.டி.விக்கிரமநாயக்க விடம் வினவினார்.

பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பவியல் பற்றிய பிரிதொரு பிரிவு இருப்பதால் குறித்த விடயம் தொடர்பில் பூரண ஒத்துழைப்பிணை வழங்கலாமென உபவேந்தர் பேராசிரியர் ஜீ.எல்.டி.விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

கௌரவ அஜித் பீ. பெரேரா அவர்களின் தலைமையில், பிரதி அமைச்சர் கௌரவ புத்திக பதிரண, அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்( கைத்தொழில் அபிவிருத்தி) மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து எண்ணக்கரு பத்திரமொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.8.3. தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த ஏற்றுமதி - கௌரவ அஜித் பீ பெரேரா

வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் கைத்தொழில்களுள் நான்காவது இடத்தை வகித்துவரும் தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை நிலவிவருவது பாரிய பிரச்சினையாகவுள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களின் ஊடாக இலகுவில் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுக்க முடியுமெனவும் கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஊடாக நடாத்தப்படும் உயர் தேசிய டிப்லோமாதாரிகளின் (HNDIT) எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமெனவும் அவர்களுக்கு பட்டப்படிப்பு வரை கற்பதற்கான வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமெனவும் கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்லோமா (HNDIT) பாடநெறியை பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சில் பயிற்சி பெறுவதற்கான வசதிகளை வழங்குமாறு கௌரவ தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு தனியார்த் துறையில் பாரியளவில் தொழில் வாய்ப்புகள் இருந்துவருவதாகவும் அத்துறையை வலுப்படுத்த வேண்டுமெனவும் கௌரவ அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்ப பூங்கா(IT Park) தொடர்பில் கலந்தாலோசிக்கப்படும் கூட்டத்தில் மேற்குறித்த விடயம் தொடர்பிலும் கலந்தாலோசிக்குமாறும் அது

தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் பற்றி அங்கு ஆராயுமாயும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 2.9. தொழில்நுட்பக் கல்லூரியொன்றைத் தாபித்தல் மற்றும் கூட்டுறவு சங்கமொன்றின் ஊழல்கள் - கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

### 2.9.1. புதிய தொழில்நுட்பக் கல்லூரியொன்றை (TTI) காலி- இமதூவ என்ற இடத்தில் ஆரம்பித்தல்

தொழில்நுட்பக் கல்லூரியொன்றை ஆரம்பிக்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 2.9.2. ஹபராதுவ கூட்டுறவுச் சங்கத்தின் ஊழல்கள்

ஹபராதுவ கூட்டுறவுச் சங்கத்தில் அப்பிரதேச மக்களினால் வைப்பிடப்பட்ட பணம் மீள செலுத்தப்படாமை தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பில் மத்திய அரசு கருத்துகளை மட்டும் வெளியிட்டுவருவதாக கூட்டுறவு ஆணையாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் பொது மக்களால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையை நீக்கும் உரிமை மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு இல்லையெனவும் அதற்கான தீர்வாக நுண் நிதி சட்டத்திற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதுவரை சம்பந்தப்படடவர்களுக்கு எதிராக வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக திருத்தங்களை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு கௌரவ தவிசாளர், கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்களுக்கு அறிவித்தார்.

## 2.10. கூட்டுறவுச் சங்கங்களின் ஆக்கங்கள் தொடர்பில் சமுர்த்தி பயன்பெறுநர்களை சேர்த்துக்கொள்ளல்- கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கூட்டுறவுச் சங்கங்களின் ஆக்கங்கள் தொடர்பில் சமுர்த்தி பயன்பெறுநர்களை இணைத்துக்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கெண்டார்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர், கூட்டுறவு ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 3. நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டம்

கௌரவ தவிசாளர், நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகளை துரிதமாக பூர்த்தி செய்யுமாறு நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளருக்கு (சட்ட வலுப்படுத்தல்) ஆலோசனை வழங்கினார்.

## 4. ஒத்திவைப்பு

கூட்டம் பி.ப.12.30 மணிக்கு, 2019.05.09 ஆம் திகதி மு.ப.11.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**மூன்றாவது கூட்டம் - 2019 மே 09**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ றிஸாட் பதியுதீன் (தவிசாளர்)
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ ஏ.டி. பிரேமதாச
கௌரவ கே.கே. பியதாஸ
கௌரவ சி. சிறீதரன்

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ லக்கி ஜயவர்தன
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ மஹிந்த அமரவீர
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ (திருமதி) துஸிதா விஜேமான்ன
கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா
கௌரவ முஹம்மது நசீர்

**விடுமுறை பற்றிய பிரேரணைகள்**
கௌரவ சிறிபால கமலத்

**1. கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்:-**

**1.1 இலங்கை அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்திற்கு எற்பட்ட நிதிசார்ந்த நட்டங்கள்**

அமைச்சரைவை விஞ்ஞாபனம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் குறிப்பிட்டார்.

**1.2 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள்**

நிதி செலுத்தப்பட்ட நிலையில் இதுவரை திறந்துவைக்கப்படாத நிலையிலுள்ள 06 கூ.மொ.வி.நிலையங்களை இரு வாரங்களுக்குள் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், கூ.மொ.வி.நிலைய பிரதம நிறைவேற்றதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார்.

பிரதேசங்கள் யாவும் உள்ளடங்கும் வகையில் 500 கூ.மொ.வி.நிலையங்களை திறந்துவைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக திசெம்பர் மாதம் வரை இலக்குடைய செயற்றிட்டமொன்றைத் தயாரித்து அதனை அடுத்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு முன் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளர், கூ.மொ.வி.நிலைய பிரதம நிறைவேற்றதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார்.

**1.3 கூட்டுறவு சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல்**

அது பற்றிய அமைச்சரவை விஞ்ஞாபனம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

**1.4 சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவுகூறும் அலுவல்களின் மேம்பாடு - கௌரவ புத்திக பதிரண**

சர்வதேச கூட்டுறவு தினத்தை நினைவுகூறும் அலுவல்களை தடையின்றி நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் பணிப்புரை வழங்கினார்.

கௌரவ தவிசாளர், எதிர்வரும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர்களை அழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.5 கொட்டஹேன, இல.05, சிறீகுணானந்த வீதி, கொழும்பு 13 என்ற இடத்தில் அமைந்துள்ள காணி - கௌரவ புத்திக பதிரண**

மேல் மாகாண கூட்டுறவு திணைக்களத்திற்குச் சொந்தமான குறித்த காணி தொடர்பில் விலைமனு கோரப்பட்டுள்ளதாகவும் அச் செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டில்லையெனவும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கப் பதிவாளர் (நிரல்) குழுவில் தெரிவித்தார்.

**1.6 இரைகம்புர கைத்தொழில் வலயத்தின் அபிவிருத்திப் பணிகள்- கௌரவ அஜித் பீ. பெரேரா**

காணிகளின் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நில அளவை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) குழுவில் தெரிவித்தார்.

**1.7 ஹொரனை-இங்கிரிய பிரதேசத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்காவொன்றை (IT Park) நிர்மாணித்தல்- கௌரவ அஜித் பீ. பெரேரா**

எண்ணக்கருப் பத்திரம் தயாரிக்கப்பட்டுவருவதாக பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) குழுவில் தெரிவித்தார்.

**1.8 தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஏற்றுமதிகள் வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் முக்கியமான தோற்றுவாயாக அமைந்திருத்தல் - கௌரவ அஜித் பீ. பெரேரா**

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் பற்றிய அறிக்கையொன்று குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

**1.9 நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல்**

சட்ட வரைபாக்கல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலைவர் குழுவில் தெரிவித்தார்.

**1.10 காலி, இமதூவ என்ற இடத்தில் புதிதாக தொழில்நுட்பக் கல்லூரியொன்றை (TTI) ஆரம்பிக்கும் பணிகளை துரிதப்படுத்தல்- கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

காலி, இமதூவ அதிவேக வீதிக்கு அருகிலுள்ள 21 ஏக்கர் பரப்பளவுடைய காணியை தொழில்நுட்பக் கல்லூரியொன்றை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்திக்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.11 நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள்- கௌரவ கே.கே.பியதாச**

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்துக்குச் சொந்தமான அறிக்கையிடப்படாத வேறு காணிகளும் இருப்பதாகவும் தனிப்பட்ட நபர்கள் அவற்றை பயன்படுத்திவருவதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர், அப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளருக்கும் மாவட்ட செயலாளருக்கும் எழுத்துமூலம் அறிவிப்பதுடன் காணிகளை அடையாளம் காணுமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.12 கண்டி-கலகெதர சலுசலவிற்குச் சொந்தமான காணியை அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் - கௌரவ புத்திக பதிரண**

தனியார் முதலீட்டாளர் ஒருவர் வாடகை செலுத்தாது பயன்படுத்திவரும் கண்டி-கலகெதர சலுசல நிறுவனத்துக்குச் சொந்தமான காணியை மீண்டும் சலுசலவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டவருவது பற்றி, கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர் வினவினார்.

குறிப்பிட்ட காணியை காணி அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

**2. வேறு விடயங்கள்**

**2.1. கூ.மொ.வி. நிலையங்களின் வர்த்தக மேம்பாடு- கௌரவ மஹிந்த அமரவீர**

கூ.மொ.வி. நிலையங்களின் வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதன் ஊடாக இந் நிறுவனங்களின் வர்த்தகத்தை ஊக்குவிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கூ.மொ.வி. நிலையங்களின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக தொலைகாட்சி ஊடகங்கள் யாவற்றையும் பயன்படுத்திக்கொள்ளுமாறும் அது தொடர்பில் வழங்குநர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர், கூ.மொ.வி. நிலையத்தின் பிரதம நிறைவேற்றதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார்.

**2.2. கூ.மொ.வி. நிலையங்களின் சுகாதார நிலை- கௌரவ கே.கே.பியதாச**

கூ.மொ.வி. நிலையங்களை சுத்தமாகவும் கிரமமாகவும் வைத்திருப்பதன் ஊடாக அதிக எண்ணிக்கையான நுகர்வோரைக் கவர முடியுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அது பற்றி பிராந்திய முகாமையாளர்களுக்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர், கூ.மொ.வி. நிலையத்தின் பிரதம நிறைவேற்றதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார்.

**2.3. கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டை - கௌரவ மயந்த திசாநாயக்க**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து இரு வாரங்களுக்குள் பதிலளிப்பதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

கௌரவ தவிசாளர், அது பற்றிய அறிக்கையொன்றை அடுத்தவாரம் தனக்குப் பெற்றுத்தருமாறு அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.4. அத்தியாவசின பொருட்களுக்கான பற்றாக்குறை ஏற்படக்கூடிய நிலை- கௌரவ மஹிந்த அமரவீர**

நாட்டில் நிலவிவரும் கலவரநிலை காரணமாக அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாவென கௌரவ உறுப்பினர் வினவினார்.

அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை நிலை பற்றி இதுவரை அறிவிக்கப்பட்டில்லையென நுகர்வோர் சேவைகள் அதிகார சபை மற்றும் கூ.மொ.வி.நிலையம் ஆகியவற்றின் தலைவர்கள் குறிப்பிட்டார்கள்.

**2.5. கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த கனிய மணலை மீட்ட தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதி- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

பயங்கரவாத யுத்தநிலை காரணமாக கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த கனிய மணலை மீட்ட தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் எடுத்துரைத்தார்.

சட்ட மாதிபர் திணைக்களத்தினால் அது பற்றிய தீர்மானமொன்று வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்(தொழில் முயற்சிகள்) குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், அது பற்றி ஆராய்ந்து செயற்படுமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

**2.6. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்கள் பற்றிய பிரச்சினைகளை ஆராய்வதற்காக திகதியொன்றைப் பெற்றுக்கொள்ளல்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்கள் தொடர்பிலான பல குறைபாடுகள் இருந்துவருவதால் அவை இயங்காத நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்ட கௌரவ உறுப்பினர் அவர்கள், அது பற்றி மட்டக்களப்பில் கலந்தாலோசிப்பதற்காக திகதியொன்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ தவிசாளரிடம் கேட்டுக்கொண்டார்.

கௌரவ தவிசாளரினால் ,குறித்த கோரிக்கை தொடர்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

**2.7. கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்துவரும் சிறுகைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

கிழக்கு மாகாணத்தில் வாழந்துவரும் 500 வரையான சிறுகைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினரின் கோரிக்கை தொடர்பில் இணக்கம் தெரிவித்த கௌரவ தவிசாளர் அவர்கள், அது பற்றிய விபரங்களை பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

### 2.8. முல்லைத்தீவு மாவட்டத்தில் UNDP கருத்திட்டத்தின் ஊடாக தாபிக்கப்பட்ட தற்போது இயங்காத நிலையில் உள்ள அரிசி ஆலைகள் - கௌரவ (திருமதி) சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா

யுத்தநிலையின் பின் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தாபிக்கப்பட்ட அரிசி ஆலைகளை பராமரிப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் அக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இல்லாத காரணத்தால் அவை இயங்காத நிலையில் இருப்பதாக கௌரவ உறுப்பினர் குழுவில் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நெல் நெல்லாகவே தென் மாகாணத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதால் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த நெல் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குச் சேரவேண்டிய பிரதிலாபங்களை அவர்கள் இழந்துவருவதாக கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். அரிசி ஆலைகளை மீண்டும் செயற்படுத்தும் பொறிமுறையை தனியாத்துறைக்கு பெற்றுக்கொடுத்தல் பொருத்தமானதெனவும் குழுவில் அறிவிக்கப்பட்டது.

அது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.9. முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் தாபிக்கப்பட்ட சிறு கைத்தொழில் சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகள்- கௌரவ (திருமதி) சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா

குறிப்பிட்ட சங்கங்கள் செற்படாத நிலையில் இருப்பதால் அச் சங்கங்களின் அங்கத்தவர்களான பெண்கள் முடிவுப் பொருட்களை சந்தைப்படுத்தல் தொடர்பில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருவதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுநியா மாவட்டங்களுடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி அங்கிருக்கும் உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.10. ஜாவத்த சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமான காணி பாதுகாப்புத் துறையினால் கைப்பற்றப்படல்- கௌரவ புத்திக பதிரண

சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினால் பயன்படுத்தப்பட்டுவரும் குறித்த காணியை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வாணிப பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இராஜகிரிய பிரதேசத்திலுள்ள காணி விசேட அதிரடிப்படையினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

சனாதிபதி செயலாளரிடம் எழுத்துமூல அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டு அக் காணிகளில் புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

அரச மற்றும் தனியார்த்துறை இணைந்த கருத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரக்கு அறிவிக்குமாறு கௌரவ பிரதி அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இராஜகிரியவில் உள்ள வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி பொலிஸ் அதிரடிப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கௌரவ பிரதி அமைச்சர் குழுவில் தெரிவித்தார்.

அது பற்றி பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.11. ஹபராதுவ ஹோட்டல் பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்திற்குச் (NIBM) சொந்தமான காணி- கௌரவ சந்திம வீரக்கொடி**

குறித்த விடயத்தைச் செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அந் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**3. ஒத்திவைப்பு**

கூட்டம் பி.ப.4.40 மணிக்கு, 2019.06.20 ஆம் திகதி மு.ப.11.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**நான்காவது கூட்டம் - 2019 ஜூன் 20**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ புத்திக பத்திறண (தவிசாளர்)
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ கே.கே. பியதாஸ
கௌரவ மயில்வாகனம் திலகராஜா

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ சந்திம வீரக்கொடி
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

**1. கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்**

**1.1 புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல்**

இம் மாதத்திற்குள் திறந்துவைக்கப்படவுள்ள ஏழு கூ.மொ.வி.நிலையங்களின் பட்டியலொன்றை கௌரவ மயில்வாகனம் திலகராஜா அவர்களுக்கு வழங்குமாறு கௌரவ தவிசாளர், பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.2 மாகாண கூட்டுறவு ஆணையாளர்களை ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு அழைத்தல்**

இக் குழுக் கூட்டத்திற்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர்கள் யாவரும் சமூகமளித்திருப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.3 நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல்**

சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலைவர் திரு.என்.எல். சேணவீர குழுவில் அறிவித்தார்.

**1.4 இமதூவ என்ற இடத்தில் புதிதாக தொழில்நுட்பக் கல்லூரியொன்றை (TET) ஆரம்பித்தல் - கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்**

குறித்த விடயம் பற்றி மேலும் கலந்தாலோசிக்கப்பட்டு கௌரவ உறுப்பினருக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

**1.5 பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்- கௌரவ மயந்த திசாநாயக்க**

யட்டிநுவர பிரிவைச் சேர்ந்த பொத்தபிட்டிய என்ற இடத்தில் கைத்தொழில் பேட்டை ஒன்றை ஆரம்பிக்கும் செயற்பாடுகளின் மேம்பாடு பற்றி கௌரவ உறுப்பினர் வினவினார்.

கைத்தொழில் பேட்டைக்கான கருத்திட்ட அறிக்கை மற்றும் புஸ்செல்ல பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து காணிகளை பெற்றுக்கொள்வதற்கான நிதி மதிப்பீட்டு அறிக்கை தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கு நிதி வழங்க முடியுமென அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

**1.6 கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த கனிய மணலை மீட்ட தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதி- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய கம்பல் மற்றும் கனிய மணல் என்பவற்றை வெவ்வேறாக கருத்திற்கொள்ள வேண்டுமெனவும் அதற்கமைய கனிய மணல் விடயமானது கனிய மணல் கூட்டுத்தாபனத்திற்கு உரியதெனவும் அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தீர்மானங்களை விரைவில் மேற்கொள்வதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.7 முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்காத நிலையில் உள்ள அரிசி ஆலைகளை மீண்டும் இயக்குதல் - கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

குறித்த விடயம் தொடர்பில் கூட்டுறவு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டபின் வரை/ப இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டு, அவர்களுடன் இணைந்து அரிசி ஆலைகளை செயற்படுத்த முடியுமென வட மாகாண உதவி ஆணையாளர்(கூட்டுறவு அபிவிருத்தி) குழுவில் தெரிவித்தார்.

**1.8 முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் தாபிக்கப்பட்ட சிறு கைத்தொழில் சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகள்- கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

குறித்த விடயம் பற்றி கலந்தாலோசிப்பதற்காக நாளொன்றை ஒதுக்குமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் நாளொன்றில் அது பற்றிய கருத்தாய்வினை நடாத்த முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.9 ஜாவத்த சலுசல நிறுவனம் மற்றும் இராஜகிரிய அரச வாணிப கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் - கௌரவ புத்திக பதிரண**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் மேதகு சனாதிபதி அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டபோது, அக் காணியை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காணி பிரதேச செயலாளருக்கு சொந்தமானதாக இருப்பதால் முழுமையான காணி உரித்தினைப் பெற முடியாதென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

சலுசல விற்கு சொந்தமான காணியைப் பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் கலந்தாாலோசிக்கவுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**2. வேறு விடயங்கள்**

**2.1 வரை/ப கிழக்கு ஹேவாகம கோரலை கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிக் கிளையில் வைப்பிடப்படப்பட்ட பணம் மற்றும் கலுத்துறை மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்க வாக்கெடுப்பு - கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**2.1.1. வரை/ப கிழக்கு ஹேவாகம கோரலை கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிக் கிளையில் வைப்பிடப்படப்பட்ட பணம் தொடர்பிலான ஊழல்கள்**

கௌரவ உறுப்பினர் அவர்கள் குறித்த விடயம் தொடர்பில் வாய்மூல பதில்களை எதிர்ப்பார்த்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் இலஞ்ச, ஊழல்கள் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**2.1.2. கலுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களின் வாக்கெடுப்புகள்**

கலுத்துறை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வாக்கெடுப்புகள் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

சம்பந்தப்பட்டவர்களுடன் அது பற்றி கலந்தாலோசிக்குமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.2 நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மொழிமூல தொழில்நுட்பக் கல்லூரியொன்றை ஆரம்பித்தல்- கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தலவாக்கலை நகரத்தை மையமாகக் கொண்டு தமிழ் மொழிமூல தொழில்நுட்பக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 2.3 கூட்டுறவு சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல் உட்பட்ட வேறு விடயங்கள்

கூட்டுறவு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், கிராமிய வங்கிகள் தொடர்பான சட்டத்தை திருத்துதல், தேசிய கூட்டுறவு கொள்கை ஆக்கம் மற்றும் தேசிய கைத்தொழில் கொள்கைகளைத் தயாரித்தல் என்ற நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மேம்பாட்டினை மீளாய்விற்கு உட்படுத்துவதற்கான பிரிதொரு பணியாட்டொகுதியை இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 2.4 மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவிவரும் குறைபாடுகள் உட்பட்ட வேறு விடயங்கள்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

### 2.4.1. மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவிவரும் குறைபாடுகள்

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவிவரும் குறைபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

பல குறைப்பாடுகள் நிலவிவருவதால் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டபின் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 2.4.2. மன்னார் மாவட்டத்தில் அரச வாகனங்கள் தவறான முறையில் கையாளப்படல்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

மாந்தை உப்பு உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவறான முறையில் கையாளப்பட்டுவருவதாக கௌரவ உறுப்பினரால் குறிப்பிடப்பட்ட விடயம் பற்றி ஆராய்ந்து, வாகனங்கள் தவறான முறையில் கையாளப்பட்டுவருமாயின் அதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ பிரதி அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

## 2.5 மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்கள் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

### 2.5.1. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களை செயற்படுத்துவதற்கு அங்கீகாரமளிக்குமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு சங்கங்கள் உரிய காலத்தில் நெல்லை கொள்வனவு செய்வதில்லையெனவும் கூட்டுறவுச் சங்கங்களில் தளபாடங்கள் மற்றும் கணனி உபகரணங்களுக்கான பற்றாக்குறை நிலவிவருவதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேச ப/நோ கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதி எற்பாடுகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

**2.5.2. வாழைச்சேனை தேசிய கடதாசி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

கௌரவ உறுப்பினர், வாழைச்சேனை தேசிய கடதாசி தொழிற்சாலையை ஆரம்பிக்குமாறும் அங்கிருக்கும் தற்போதைய தலைவருக்குப் பதிலாக தகைமைகளைக் கொண்ட ஒருவரை நியமிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**2.5.3. புதிதாக கூ.மொ.வி நிலையங்களைத் திறந்துவைத்தல்**

மாவட்டத்தில் மூன்று இடங்களில் புதிதாக கூ.மொ.வி நிலையங்களைத் தாபிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

**2.6 போகாகொட கூ.மொ.வி நிலையத்தை வேறு இடத்திற்கு கொண்டுசெல்லல்- கௌரவ சந்திம வீரக்கொடி**

**2.6.1. போகாகொட கூ.மொ.வி நிலையத்தை வேறு இடத்திற்கு கொண்டுசெல்லல்**

போகாகொட கூ.மொ.வி நிலையம் தற்போது அமைந்துள்ள இடம் வர்த்தகத்திற்கு மிகவும் பொருத்தமான இடமாகவிருப்பதால் அக் காணியைப் பெற்றுக்கொண்டு அங்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல் பொருத்தமானதென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

குறித்த கட்டிடம் சேதமடைந்த நிலையில் இருப்பதால் கூ.மொ.வி நிலையம் வேறு கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

**2.6.2. இமதூவ கூ.மொ.வி நிலையத்திற்கான நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணித்தல்- கௌரவ சந்திம வீரக்கொடி**

இமதூவ கூ.மொ.வி. நிலையம் வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடமொன்றில் இயங்கிவருவதால் பிரதேச சபையின் பழைய பொலிஸ் நிலையம் அமைந்திருந்த கட்டிடத்தை சீர்த்திருத்தம் செய்து அதற்காக பயன்படுத்த முடியுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அது பற்றி ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**3. ஒத்திவைப்பு**

கூட்டம் 2019.07.25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

**கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**முதலாவது கூட்டம் - 2019 ஜுலை 09**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**

கௌரவ அகில விராஜ் காரியவசம் (தவிசாளர்)
கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ இம்ரான் மஹ்ரூப்
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி
கௌரவ (கலாநிதி) எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில்

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ புத்திக பதிறண
கௌரவ பியசேன கமகே
கௌரவ தயாசிறி ஜயசேகர
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ பைஸால் காசிம்
கௌரவ டுலீப் விஜேசேக்கர
கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன
கௌரவ ரீ.ரன்ஜித் த சொய்சா
கௌரவ சி.சிறீதரன்
கௌரவ மயில்வாகனம் திலகராஜா
கௌரவ சுஜித் சங்ஜய பெரேரா
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன
கௌரவ ஹேசா விதானகே
கௌரவ சந்தித் சமரசிங்க

## 1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்

### 1.1. இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கொடகவெல ராகுல தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமித்தல்- கௌரவ ரீ.ரன்ஜித் த சொய்சா

ஒரு அதிபரை நியமிக்கும்வரை கௌரவ ரீ.ரன்ஜித் த சொய்சா, கௌரவ ஹேசா விதானகே ஆகிய இரு உறுப்பினர்களால் பிரேரிக்கப்படும் அதிபரை அணவல் அங்கீகாரத்தின் கீழ் ஒருங்கிணைப்பு செய்ய முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.2. தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை முறைமைப்படுத்தல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ லசந்த அலகியவன்ன

#### 1.2.1. தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை முறைமைப்படுத்தல்

தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை ஒரு பொதுவான கொள்கையின் கீழ் செயற்படுத்துவதற்காக புதிய கல்விச் சட்டத்தின் கீழ் கல்வி அமைச்சுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் அது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதாகவும் குழுவில் தெரிவித்தார்.

#### 1.2.2. ஆசிரிய ஆலோசகர் சேவையை தாபித்தல்

ஆசிரிய ஆலோசகர் சேவையை தாபித்தல் தொடர்பில் கௌரவ லசந்த அலகியவன்ன, கௌரவ விஜேபால ஹெட்டி ஆரச்சி, கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன ஆகியோர் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் குழுவில் கருத்து தெரிவித்தனர்.

ஆசிரிய ஆலோசகர் சேவையை தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் நிறுவன பணிப்பாளர் நாயகம், அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியோரின் அங்கீகாரம் வழங்கப்பட்டபின் அதனை தாபிக்க முடியுமெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.2.3. 2013 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சும் விளையாட்டுகள் அமைச்சும் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு நிகழச்சித் திட்டம்

2014 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டம் முறையாக செயற்படுத்தப்படவில்லையென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

திட்டத்துக்கு அமைய ஆசிரியர் கைநூல் மற்றும் இருவெட்டுகள் ஆகியவற்றை தயாரிக்கும் பணிகளை இவ்வருடத்தில் பூர்த்தி செய்ய முடியுமெனவும் 2020 ஆண்டில் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க முடியுமெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.2.4. ஆசிரியர்களின் தகவல்கள் அடங்கிய கணனி தகவல் முறைமை

கௌரவ உறுப்பினரால் வினாவப்பட்ட, ஆசிரியர்களின் தகவல்கள் அடங்கிய கணனி தகவல் முறைமையின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.2.5. புதிய தேசிய பாடசாலைகைளை ஆரம்பித்தல்

கௌரவ லசந்த அலகியவன்ன, கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி,கௌரவ நிஹால் கலப்பத்தி ஆகியோரின் கேள்வி குறித்து பதிலளிக்கப்பட்டபோது, தற்போது 361 தேசிய பாடசாலைகள் இருப்பதாகவும் புவியியல் அடிப்படை, மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் க.பொ.த (உ.த) எல்லா பாடங்களும் உள்ளடங்கல் என்ற வகையில் 1000 தேசிய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.2.6. நுண்ணறி வகுப்பறைகள் (Smart Class Room) நிகழ்ச்சித் திட்டம்

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தலின் மேம்பாடு மற்றும் எல்லா பாடநெறிகள் தொடர்பிலும் காட்சி ஊடகங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

க.பொ.த (உ/தரம்) மற்றும் க.பொ.த. (சா/தரம்) பாட நெறிகள் தொடர்பில் சீடி மற்றும் டிவிடி பயன்படுத்தப்பட்டுவருவதாக குழுவில் தெரிவித்தார்.

## 1.3. அம்பாறை டி.எஸ். சேணாநாயக்க தேசிய பாடசாலையில் நிலவிவரும் கட்டிடங்கள் தொடர்பான பிரச்சினைகள்- கௌரவ விமலவீர திசாநாயக்க

சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழுவில் அறிவிக்கப்பட்டது.

## 1.4. கொழும்பு றோயல் கல்லுரிக்கு க.பொ.த (உ./தர) இற்கான விவசாயப் பாட ஆசிரியரைப் பெற்றுக்கொள்ளுதல்- துலீப் விஜேசேகர

இப் பாடசாலைக்கு ஒரு விவசாய பாட ஆசிரியரை நியமிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.5. பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த மெதிரிகிரிய தேசிய பாடசாலையில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை- கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கல்விக் கல்லூரிகளிலிருந்து 4000 புதிய ஆசிரியர்கள் அண்மையில் வெளியேறவிருப்பதால் அவர்களைக் கொண்டு தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.6. ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை- கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

மாகாண சபைகளுக்கு ஒருங்கிணைக்கப்படும் ஆசிரியர்களை மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு ஒருங்கிணைப்பதில் குறித்தவொரு பொறிமுறை பின்பற்றப்படாத காரணத்தால் எல்பிட்டிய கல்வி வலயததில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்றை நிலவிவருகின்றபோதிலும் காலி வலயத்தில் ஆசிரியர் மிகை காணப்படுவதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பதற்காக மாகாண கல்விச் செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் விடயப் பொறுப்பான பணிப்பாளர்கள் ஆகியோரை அடுத்துவரும் கல்வி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு அழைக்குமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 1.7. மாத்தளை மாவட்டத்தில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை- கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

மாத்தளை, லக்கல மற்றும் வில்கமுவ கல்வி வலயங்களைச் சேர்ந்த தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் 172 ஆசிரியர் வெற்றிடங்கள் இருந்துவருவதாக கௌரவ உறுப்பினர் அவர்கள் முன்வைதத கோரிக்கைக்கு அமைய ஆசிரியர் வெற்றிடங்கள் யாவற்றையும் மிகக் குறுகிய காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 1.8. வில்கமுவ கல்வி வலயத்தின் ஆசிரியர் விடுதிகள் - கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

வில்கமுவ கல்வி வலயத்திற்கான ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிக்குமாறு கௌரவ உறுப்பினரின் கேள்விகளுக்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள், " அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" திட்டத்தின் கீழ் கஷ்டப் பிரதேசங்களில் 300 ஆசிரியர் விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்கள்.

## 1.9. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந் தொண்டர் ஆசிரியர்களுக்கு பதவி நியமனங்களை வழங்கல்- கௌரவ சந்தித் சமரசிங்க

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கௌரவ உறுப்பிரின் கோரிக்கைக்கு பதிலளிக்கப்பட்டபோது , பரீட்சையில் சித்தியடைந்த 731 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளை மீளாய்வு செய்தபின் மீதி ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுமென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

## 1.10. வாழைச்சேனை இந்து வித்தியாலயம் மற்றும் செங்கலடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றை தேசிய பாடசாலைகளாக மாற்றுதல் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்கள்

### 1.10.1. வாழைச்சேனை இந்து வித்தியாலயம் மற்றும் செங்கலடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றை தேசிய பாடசாலைகளாக மாற்றுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கல்குடா பிரிவில் தமிழ் மொழிமூல ஒரு தேசிய பாடசாலையேனும் இல்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார். வாழைச்சேனை இந்து வித்தியாலயம், செங்கலடி மத்திய மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துமாறு கௌரவ உறுப்பிர் கேட்டுக்கொண்டார்.

1000 புதிய தேசிய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சில பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்கு ஆளுநரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.10.2. கல்குடா மற்றும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயங்களில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறைக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளல்

வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையின் கீழ் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.மட்டக்களப்பு-பட்டிருப்பு வலயப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாகவும் அவர்களை மேற்குறித்த பாடசாலைகளுக்கு பெற்றுத்தருமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

மதுரங்குழி மற்றும் கட்டுமுறி ஆகிய பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருவதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் எடுத்துரைத்தார்.

### 1.10.3. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் நிலவிவரும் குறைபாடுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அதிகமான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருவதாகவும் கட்டிட மற்றும் தளபாட வசதிகள் இல்லையெனவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

### 1.10.4. நாவல்காடு-நாமகள் வித்தியாலயத்தில் நிலவிவரும் குறைபாடுகள்

நாவல்காடு-நாமகள் வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்திற்குத் தேவையான தளபாடங்களை வழங்குவதுடன் அதனை திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 1.10.5. மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவிவரும் குறைபாடுகள்

மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கனிஷ்ட ஊழியர்களும் காவற்காரர்களும் இல்லையெனவும் சமய பாடத்தை கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருவதாகவும் அந் நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 1.11. கல்வி வலயங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்- கௌரவ இம்ரான் மஹ்ரூப் அவர்கள்

கல்வி வலயங்களை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொகுதிக் கல்விக் காரியாலயங்களை முடிவுறுத்துவதுடன் கல்வி வலயங்களின் எண்ணிக்கையை 200 வரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

## 1.12. சம்மாந்துரை தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமித்தல்- கௌரவ (கலாநிதி) எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில் அவர்கள்

சம்மாந்துரை தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அணவல் அங்கீகாரத்தின் கீழ் தற்கால அடிப்படையில் அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**1.13. காலி மாவட்டத்தைச் சேர்ந்த நெலுவ தேசிய பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமித்தல்- கௌரவ பியசேன கமகே**

அணவல் அங்கீகாரத்தின் கீழ் குறித்த அதிகாரிக்கு அதிபர் நியமனத்தை வழங்குமாறு கௌரவ தவிசாளர், தென் மாகாண கல்விச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.14. தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரியர் குழுமமொன்றை அமைத்தல் -கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

ஆசிரியர்கள் லீவு பெற்றுக்கொள்ளல், ஓய்வு பெறல் மற்றும் மகப்பேற்று லீவு பெற்றுக்கொள்ளுதல் ஆகிய காரணங்களால் ஆசிரியர்கள் லீவு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் தற்காலிக ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்வதற்கான துரித தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஆசிரியர் குழுமமொன்றை அமைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் பயிற்சிக்கான ஆசிரியர் குழுமமொன்று அமைக்கப்படுவது வசதியாக அமையுமெனவும் கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.15. ஊவா மற்றும் மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீடு செய்தல் தொடர்பான பிரச்சினைகள் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ மயில்வாகனம் திலகராஜா அவர்கள்**

**1.15.1. ஊவா மற்றும் மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீடு செய்தல் தொடர்பான பிரச்சினைகள்**

பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஆசிரிய உதவியாளர்களை ஆசியர் சேவைக்கு உள்ளீடு செய்தல் மற்றும் சம்பளம் வழங்கல் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஆசிரிய உதவியாளர்கள் கட்டாயம் ஆசிரியர் சேவைக்கு உள்ளீடு செய்யப்பட வேண்டுமெனவும் அது தொடர்பிலான சுற்றுநிருபங்கள், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் மாகாண சபையின் இணக்கப்பாடு ஆகியவை பெறப்பட்டுள்ளதாகவும் சிரேட்ட உதவிச் செயலாளர்( ஆசிரியர் தாபன) திரு.கே.ஜீ.விஜேசிறி குழுவில் தெரிவித்தார்.

குறித்த விடயம் பற்றி நிதி அமைச்சுடன் கலந்தாலோசிக்கப்பட்டுவருவதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் குழுவில் குறிப்பிட்டார்கள்.

**1.15.2. நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை வதிவிட ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களாக நியமித்தல் -கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

ஹட்டன் கல்வி வலயத்தைச் சேர்ந்த சில ஆசிரியர்கள் வதிவிட ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதால் பாடசாலை நிருவாகத்தில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் தொடர்பில் துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு அடுத்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு மாகாண செயலகத்தினால் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.16. முறைசாரா கல்விப் பிரிவைச் சேர்ந்த கருத்திட்ட உதவியாளர்களின் பிரச்சினைகள்- கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

முறைசாரா கல்விப் பிரிவைச் சேர்ந்த கருத்திட்ட உதவியாளர்கள் பட்டதாரிகளெனவும் அவர்களுக்கான முறையான ஆட்சேர்ப்பு நடபடிமுறை மற்றும் சம்பள அளவுத் திட்டமொன்று இல்லாமை பிரச்சனையாகவுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

198 கருத்திட்ட உதவியாளர்களை 2013ஆம் ஆண்டு முதல் எம்என் 6 ஆரம்ப சம்பள அளவுத் திட்டத்தில் வைப்பதற்கு தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் இயக்கம் தெரிவிக்கப்பட்டில்லையெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ தவிசாளர், அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைத் தயாரித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**1.17. கல்வி நிருவாகச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான பிரச்சினைகள் - கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

2012 ஆம் ஆண்டு கல்வி நிருவாக சேவை தொடர்பில் பரீட்சை நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படாதவர்களால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபின் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுக்கொண்ட 25 பேருக்கும் அவர்களுடன் இருக்கும் ஏனையவர்களுக்கும் நியமனங்களை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டுள்ள 25 பேருக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் நியமனங்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் 501 புதிய ஆட்சேர்ப்புகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் சிரேட்ட உதவிச் செயலாளர் (கல்விச் சேவைகள் -தாபன) திருமதி அனூஷா பட்டவல குழுவில் தெரிவித்தார்.

**1.18. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கல்- கௌரவ தயாசிறி ஜயசேக்கர**

2005 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின் எஞ்சிய குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களையும் ஆட்சேர்ப்பு செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

பரீட்சையில் சித்தியடைந்த 80 வீதமானவர்கள் ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்களெனவும் எஞ்சியவர்கள் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் எனவும் பரீட்சை ஆணையாளர் திரு. சனத் சுஜீவ குறிப்பிட்டார்.

குறித்த விடயம் பற்றி எதிர்வரும் கூட்டங்களில் கலந்தாலோசிப்பதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

இன்று குழுவில் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத விடயங்களை மீண்டும் கலந்தாலோசிப்பதற்காக, நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள், திட்டமிடல் உத்தியோகத்தர்கள் ஆகியோரை அடுத்த கூட்டத்திற்கு அழைக்குமாறு கௌரவ தவிசாளர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2. ஒத்திவைப்பு**

கூட்டம் பி.ப.3.35 மணிக்கு, 2019.07.26 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு இரண்டாவது கூட்டம் - 2019 ஜுலை 10**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ சாகல ரத்நாயக்க (தவிசாளர்)
கௌரவ அர்ஜுன ரணதுங்க
கௌரவ சமல் ராஜபக்ஷ
கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ முஹம்மது நசீர்

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ பி. ஹரிசன்
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ ஈ. சரவணபவன்
கௌரவ (டாக்டர்) சி.சிவமோகன்

**1. கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்**

**1.1 காலி துறைமுக அபிவிருத்தி அலுவல்களின் மேம்பாடு- கௌரவ சந்திம வீரக்கொடி**

குழுவின் ஆலோசனைக்கமைய தயாரிக்கப்பட்ட காலி துறைமுக வளாகத்தில் உள்ள சீமேந்துத் தொழிற்சாலை தொடர்பிலான அறிக்கை குழுவில் முன்வைக்கப்பட்டது.

**1.2 ரூமஸ்சல- ஜப்பான் சாம விகாரைக்கு அண்மையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அவுகன புத்தர் சிலை தொடர்பில் காணியை விடுவித்தல் - கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

குறித்த நிலம் சரணாலயமாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ளதால் வேறு அலுவல்கள் தொடர்பில் அக்காணிகளை விடுவிக்க முடியாதென குழுவில் தெரிவித்தார்.

**1.3 முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்கு அந்நியமனங்களை வழங்கல்- கௌரவ நிஹால் கலப்பத்தி**

கனிஷ்ட முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு அதன் பின் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைய அந் நியமனங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப் பதவி அணிக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு 150 பேருக்கு அந் நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

**1.4 தற்காலிக மற்றும் அமைய அடிப்படையிலான ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கல் - கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

தேவையான தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள எல்லா ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குழுவில் தெரிவித்தார்.

**1.5 யுத்தகாலத்தில் முழுமையாக சேதமடைந்திருந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கலங்கரை விளக்கத்தை புனரமைத்தல்- கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

அதற்கான நிதி ஏற்பாடுகள் இவ்வருடத்தில் ஒதுக்கப்பட்டில்லாத காரணத்தால் அடுத்த வருடம் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்ப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.6 தலைமன்னாரில் இருந்து இந்தியா வரையான கப்பல் சேவையொன்றை ஆரம்பித்தல் -கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

தலைமன்னாரிலிருந்து இந்திய இராமேஷ்வரம் வரையான கப்பல் சேவையொன்றை ஆரம்பிக்கும் பணிகள் இராமேஸ்வர தரப்பினரின் காலதாமதம் காரணமாக பின்தங்கிய நிலையில் இருப்பதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.அத்துடன் காங்கேசன்துறை தொடக்கம் கரிகாலன் வரையான கப்பல் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

**1.7 தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்கள், கொட்டவில நவ நகரம் மற்றும் மிரிஸ்ஸ சுற்றுலா வலயம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் பணிகள்- கௌரவ கஞ்சன விஜேசேகர**

அறிமுகப்படுத்தப்படவுள்ள தெற்கு கோட்டை சட்டம் (Southern Fort Act) அங்கீகார அலுவல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் இவ்விடயங்கள் தெற்கு அபிவிருத்தி இடைக்கால சபையின் கீழ் இல்லாத காரணத்தாலும் குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவில் கலந்தாலோசிக்க முடியுமென கௌரவ தவிசாளர், குழுவில் தெரிவித்தார்.

**2. கிங்- நில்வலா திசைதிருப்பும் கருத்திட்டம் பற்றிய சமர்ப்பணம்**

நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் கிங்- நில்வலா கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் உத்தேச கருத்திட்டம் பற்றிய விபரங்களும் எதிர்கால திட்டம் பற்றிய விளக்கமும் குழுவில் முன்வைக்கப்பட்டது.

**3. வேறு விடயங்கள்**

**3.1. துறைமுக அதிகார சபையின் தற்கால வருமான நிலை குறைதல் - கௌரவ கஞ்சன விஜேசேகர**

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது துறைமுக அதிகார சபையின் வருமானத்தில் வீழ்ச்சி காணப்படவில்லையெனவும் 10% -12% வீத வருமான அதிகரிப்பு இருந்துவருவதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

**3.2. பல குற்றச்சாட்டுகளின் கீழ் வேலை நீக்கம் செய்யப்பட்ட திரு.ரணதுங்கவை மீள சேவையில் அமர்த்தல்- கௌரவ கஞ்சன விஜேசேகர**

பலமுறை வேலை நீக்கம் செய்யப்பட்ட ரணதுங்க எனும் ஒருவர் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

குறிப்பிட்டவர் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் அப் பதவி தொடர்பில் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படும்வரை அவர் 06 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**3.3. ஜயா கொள்களன்கள் தனியார் நிறுவனத்தினால் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பத்திரிகை விளம்பரம் வெளியிடப்படல்- கௌரவ கஞ்சன விஜேசேகர**

ஜயா கொள்களன்கள் தனியார் நிறுவனம் என்ற ஊயர்களை ஆட்சேர்ப்பு செய்யும் மன்றம் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்துவருவது தனியார் நிறுவனங்கள் தொடர்பிலா அல்லது துறைமுக அதிகார சபை தொடர்பிலா என்பது பற்றி விளக்கமளிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விளம்பரம் தங்கள் ஜயா கொள்களன்கள் தனியார் கம்பனியினால் பிரசுரிக்கப்பட்டவையெனவும் அவை தங்கள் நிறுவனத்தின் ஆட்சேர்ப்புகள் தொடர்பானவையெனவும் அந் நிறுவனத் தலைவர் குறிப்பிட்டார்.

**4.** குழு, பி.ப.4.00 மணிக்கு, 2019.09.17 ஆம் திகதி பி.ப.02.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**ஐந்தாவது கூட்டம் - 2019 ஜுலை 11**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**

கௌரவ புத்திக பத்திறண (தவிசாளர்)
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ ஏ.டி.பிரேமதாச
கௌரவ கே.கே. பியதாஸ
கௌரவ மயில்வாகனம் திலகராஜா

**சமூகமளித்த குழு அல்லாத உத்தியோகத்தர்கள்**

கௌரவ விமல் வீரவங்ச
கௌரவ வாசுதேச நாணாயக்கர
கௌரவ பாலித்த ரங்கே பண்டார
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம
கௌரவ அநுர சிட்னி ஜயரத்ன
கௌரவ கே.கே.பியதாச
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ அ. அரவிந்த் குமார்
கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்
கௌரவ மயில்வாகனம் திலகராஜா
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

**1. தினப்பணிகள்**

**1.1 இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை வழங்கல் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை**

குறித்த அறிக்கைகள் குழுவில் முன்வைக்கப்பட்டன.

குறிப்பிட்ட அறிக்கை பற்றி கௌரவ விமல் வீரவங்ச, கௌரவ வாசுதேச நாணாயக்கர, கௌரவ மயில்வாகனம் திலகராஜா ஆகியோர் வினவினார்கள்.

குறிப்பிட்ட அறிக்கை பற்றி ஆராய்ந்து அது தொடர்பில் அடுத்த ஆலோசனைக் குழுக் கூட்டமொன்றின்போது கலந்தாலோசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கௌரவ தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

**2. வேறு விடயங்கள்**

**2.1 கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டையை துரிதமாக ஆரம்பித்தல்- கௌரவ மயந்த திசாநாயக்க**

கௌரவ தவிசாளர், அடிக்கல் நாட்டும் அலுவல்களை 2019.07.13 ஆம் திகதி பி.ப.2.30 நடாத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ உறுப்பினருக்கு அறிவித்தார்.

**2.2 மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் குறைபாடுகள் உட்பட்ட வேறு விடயங்கள் - கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன் அவர்கள்**

**2.2.1 மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் குறைபாடுகள்**

மேற்குறிப்பிடப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் கூரைகளை சீரமைப்பதற்கான உதவிகளைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

**2.2.2 மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கான அனுமதியை வழங்கல்**

மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு இதுவரை மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அக் கூட்டுறவு சங்கங்களுக்கு பெற்றோல் மற்றும் டீசல் விநியோகிப்பதற்கான அங்கீகாரத்தினையும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

**2.2.3 ஏறாவூர் வடக்கு மற்றும் தெற்கு கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமான அரிசி ஆலைகளை புனரமைத்தல்**

ஏறாவூர் வடக்கு மற்றும் தெற்கு கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தமான இரண்டு அரிசி ஆலைகளை புனரமைப்பதற்காக நிதி ஏற்பாடுகளை பெற்றுத்தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

**2.2.4 மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த கால்நடைவளங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்**

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு கணனிகளையும் மென்பொருட்களையும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

**2.2.5 நெசவுக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நெசவுக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான மின்தறிகள் மற்றும் தையல்

இயந்திரங்களைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

### 2.2.6 கோரளைபத்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சனசமூக நிலையத்திற்கான தளபாடங்களையும் ஒலிபெருக்கியொன்றையும் பெற்றுக்கொள்ளுதல்

கோரளைபத்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சனசமூக நிலையத்திற்கான தளபாடங்களையும் ஒலிபெருக்கியொன்றையும் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

### 2.2.7 இலுப்படிச்சேனை, கொம்மாதுரை, மன்முனை மேற்கு ஆகிய கால்நடைவளங்கள் கூட்டுறவுச் சங்களுக்கான மேய்ச்சல் தரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

இலுப்படிச்சேனை, கொம்மாதுரை, மன்முனை மேற்கு ஆகிய கால்நடைவளங்கள் கூட்டுறவுச் சங்களுக்கு போதியளவு மேய்ச்சல் தரைகள் இல்லையெனவும் மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள மேய்ச்சல் தரைகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெற்றுத்தருமாறும் கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், மன்முனை மேற்கு ப/நோ கூட்டுறவுச் சங்கத்தினால் பால் உற்பத்தி செய்யப்பட்டுவருவதாகவும் அதற்கான இயந்திரங்களும் குளிரூட்டல் வசதிகளும் இல்லையெனவும் அவற்றைப் பெற்றுத்தருமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 2.2.8 கிழக்கு மாகாண பெண்கள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கான கட்டடமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

கிழக்கு மாகாண பெண்கள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிரந்தமான கட்டிடமொன்று இல்லையெனவும் அதற்கான காணியொன்றைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நெசவுக் கைத்தொழிலில் ஈடுபட்டுவரும் பெண்களின் உற்பத்திகளை சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கான வாகன வசதிகளைப் பெற்றுத்தருமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அம் மாகாணத்தைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக SMILE III கடனுதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவிகளை வழங்க முடியுமெனவும் நிதி தேவைப்படும் சங்கங்களுக்கு கடிதங்களை அனுப்பிவைக்குமாறும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.2.9 வாழைச்சேனை தேசிய கடதாசித் தொழிற்சாலையை ஆரம்பித்தல்

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

## 3. ஒத்திவைப்பு

கூட்டம் பி.ப.3.30 மணிக்கு 2019.07.25 ஆம் திகதி மு.ப.11.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

## சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதலாவது கூட்டம் - 2019 ஜுலை 12

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன (தவிசாளர்)
கௌரவ வீரகுமார திசாநாயக்க
கௌரவ (திருமதி) துஸிதா விஜேமான்ன

**சமூகமளித்த குழு அல்லாத உறுப்பினர்கள்**
கௌரவ சாகல ரத்நாயக்க
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ பைஸால் காசிம்
கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ ச.வியாழேந்திரன்
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன
கௌரவ (டாக்டர்) சி.சிவமோகன்
கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி
கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க
கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா
கௌரவ (கலாநிதி) எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில்

### 1. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவம் பற்றிய அமைச்சின் செயலாளரின் பின்வரும் பிரேரணைகள் தொடர்பிலான அறிக்கைகள் கௌரவ புத்திக பதிரண அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**1.1.** அகில இலங்கை குடிநீர் கைத்தொழிலாளர்களின் சங்கத்தின் செயலாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள குடிநீர் உற்பத்தி நிலையங்களை தரப்படுத்தல் தொடர்பிலான கோரிக்கை - கௌரவ புத்திக பத்திறண- (பிரேரணை இல.19)

**1.2.** இடமாற்றமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் அகுரெஸ்ஸ, மாரப என்ற இடத்தில் வதியும் திருமதி எஸ்.ஏ.குணவர்தன என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை - கௌரவ புத்திக பத்திறண- (பிரேரணை இல.24)

**1.3.** தோட்டத்துறையில் பணிபுரிந்துவரும் தகைமைகளைக் கொண்ட குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களை அரச சேவையில் உள்ளீடு செய்யுமாறு இரத்தினபுரி, திரிவானாகெட்டிய என்ற இடத்தில் வதியும் திருமதி பீ.கே.ஆர்.விஜேகாந்தி என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை. - கௌரவ புத்திக பத்திறண- (பிரேரணை இல.25)

**1.4.** தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்- தொடர்பில் கோட்டேகொட, பாதேகம தெற்கு, “சமீர” என்ற முகவரியில் வதியும் திரு. என்.டி. இரோஷ் லக்மால் என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை. - கௌரவ புத்திக பத்திறண- (பிரேரணை இல.77)

## 2. தினப் பணிகள்

### 2.1 தெனியாய வைத்தியசாலை தொடர்பான கருத்தாய்வு

தெனியாய ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டப் பிரேரணை தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொழில்நுட்ப மதிப்பீட்டலுவல்கள் சமவாய கருத்தாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ சாகல ரத்நாயக்க கருத்திட்டம் பற்றி குழுவில் கருத்து தெரிவித்தார். ஒப்பந்தக்காரர் மற்றும் அமைச்சின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய உசாத்துணைப் பணியகத்தின் பங்களிப்பு பற்றி கௌவ அமைச்சர் வினவினார்.

குறித்த பணியகத்தினால் ஆலோசனைகள் மட்டும் வழங்கப்படுவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 2.2 லக்கல வைத்தியசாலை தொடர்பான கருத்தாய்வு

லக்கல வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரப்படுத்தல் தொடர்பில் கௌரவ (திருமதி) றோஹினி குமாரி விஜேரத்ன வினவினார்.

குறித்த விடயம் தொடர்பிலான திடடமொன்றைத் தயாரித்தல் உட்பட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 2.3 கலுத்துறை பொது வைத்தியசாலை தொடர்பான கருத்தாய்வு

கலுத்துறை வைத்தியசாலை தொடர்பில் 6 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருவதாகவும் இன்னும் 04 கருத்திட்டங்களுக்கான வழங்கல் நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.இந் நான்கு கருத்திட்டங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

## 3. வேறு விடயங்கள்

### 3.1 தொம்பே வெதகம ஆயுர்வேத வைத்தியசாலையின் நிர்மாணிப்புகள் மற்றும் வத்துபிட்டிவல வைத்தியசாலைக்கு சீ.டி. ஸ்கேன் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்- கௌரவ ஹர்ஷன ராஜகருணா

#### 3.1.1 தொம்பே, வெதகம ஆயுர்வேத வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள்

குறித்த விடயம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை அதிகமாகவிருப்பதால் மீண்டும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

#### 3.1.2 வத்துபிட்டிவல வைத்தியசாலைக்கு சீ.டி. ஸ்கேன் இயந்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

சீ.டி. ஸ்கேன் இயந்திரங்கள் 05 கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவற்றுள் ஒன்றை குறித்த வைத்தியசாலைக்கு வழங்கவுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள்) குழுவில் தெரிவித்தார்.

## 3.2 கராபிட்டிய தாய்மார் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள், கராபிட்டிய வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள், எல்பிட்டிய மற்றும் பலப்பிட்டிய வைத்தியசாலைகளின் நிர்மாணப் பணிகள்- கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

### 3.2.1 கராபிட்டிய தாய்மார் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள்

நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுவருவதாகவும் வைத்தியசாலையின் பிரவேச பாதைக்கான காணித்துண்டொன்று சுவீகரிக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.குறித்த வைத்தியசாலைக்குத் தேவையான ஏனைய உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக இரண்டு யூரோ மில்லியன் தேவைப்படுவதாக ஒப்பந்தக்காரரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் பற்றி அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 3.2.2 கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள்

கராபிட்டிய வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதால் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

### 3.2.3 கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் சிறுநீரக பிரிவின் பணிகள் பூர்த்தி செய்யப்படாமை

கராபிட்டிய வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவின் நிர்மாணப் பணிகளில் 86% பூர்த்தி செய்யப்பட்டுள்ளபோதிலும் ஒப்பந்தக்காரரின் பற்றுச்சீட்டுகளுக்கான கட்டணங்கள் இதுவரை செலுத்தப்படாத காரணத்தால் அவை பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருப்பதாக கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் பதில் கடமை பணிப்பாளர் குழுவில் தெரிவித்தார்.

பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்தப்படவேண்டிய பற்றுச்சீட்டுகள் நிலுவையாக இருப்பதால் புற்றுநோய் பிரிவிற்கு உபகரணங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்தப்படவேண்டிய பற்றுச்சீட்டுகளை செலுத்துமாறு கௌரவ தவிசாளர், ஆலோசனை வழங்கினார்.

### 3.2.4 எல்பிட்டிய மற்றும் பலபிட்டிய வைத்தியசாலைகளின் நிர்மாணப் பணிகள்

குறித்த விடயம் தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கிகாரம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்படவுள்ளதாகவும் தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குழுவில் தெரிவித்தார்.

## 3.3 கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவ சேவைகள் தொடர்பான பிரச்சினைகள்- கௌரவ சி. சிறீதரன்

### 3.3.1. கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவதுவத்துறை சார்ந்த பதவி வெற்றிடங்கள்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் மருத்துவர்கள், தாதிகள் மற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் அதிகமாக இருந்துவருவதாகவும் அவற்றை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

### 3.3.2. கிளிநொச்சி வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள்

கிளிநொச்சி வைத்தியசாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் தொடர்பில் அடிக்கல் நாட்டப்பட்டு 05 மாதங்களாகின்றபோதிலும் அங்கு எவ்வித நிர்மாணப் பணிகளும் முன்னெடுக்கப்படாமை தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

## 3.4 ஹெட்டிபொல வைத்தியசாலையின் சிறுநீரக நோய் நிவாரண அலகிற்கான உபகரணங்கள்- கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

வில்கமுவ- ஹெட்டிபொல வைத்தியசாலையின் சிறுநீரக நோய் நிவாரண அலகிற்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

குறித்த இடத்தில் தாபிக்கப்படிருப்பது சிறுநீரக நோய் தொடர்பான பிணிமனையெனவும் லக்கல வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரப்படுத்தப்பட்டபின் அங்கு சிறுநீரக நோய் நிவாரண அலகொன்றைத் தாபிக்க முடியுமெனவும் மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர், அதற்கமைய செயற்படுமாறு ஆலோசனை வழங்கினார்.

## 3.5 முல்லைத்தீவு மாவட்டத்து மருத்துவத்துறை சார்ந்த பிரச்சினைகளும் மல்லாவி வைத்தியசாலைக்கு இரத்த வங்கியொன்றின் தேவையும்- கௌரவ (திருமதி) சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா

### 3.5.1. முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிவரும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான பற்றாக்குறை

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருவதால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாகவும் அதேபோல் இம் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியசாலை பணியாட்டொகுதிக்கான உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும் கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியசாலைகளுக்கு மருத்துவ வாட்டுத் தொகுதியின் அவசியம் பற்றி கௌரவ உறுப்பினர் குழுவில் கருத்து தெரிவித்தார்.

குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 3.5.2. மல்லாவி ஆரம்ப வைத்தியசாலைக்கு இரத்த வங்கியொன்றின் அவசியம்

மல்லாவி ஆரம்ப வைத்தியசாலைக்கு இரத்த வங்கியொன்று அவசியமென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இரத்தம் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொள்ள வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதன் பின் இரத்த வங்கியொன்றை தாபித்தல் தொடர்பில் கவனம் செலுத்த முடியுமெனவும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள் 02) பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 3.6 சுவசெரிய பிணியாளர் வண்டிச் சேவை மூலம் வைத்தியசாலைகளுக்கிடையே நோயாளர்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் ஆலோசகர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதிகள் - கௌரவ(டாக்டர்) சி.சிவமோகன்

### 3.6.1. சுவசெரிய பிணியாளர் வண்டிச் சேவை மூலம் நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கிடையே கொண்டு செல்லுதல்

சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய சுவசெரிய பிணியாளர் வண்டிச் சேவை மூலம் வதிவிடங்களிலிருந்து நோயாளர்கள் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றபோதிலும் நோயாளர்கள் ஒரு வைத்தியசாலையிலிருந்து மற்றொரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதில்லையென குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 3.6.2. வவுனியா மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த ஆலோசகர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் பற்றாக்குறை

வவுனியா மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த ஆலோசகர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களின் பற்றாக்குறை நிலவிவருவதால் அவர்கள் இவ் வைத்தியசாலைக்கு சமூகமளிப்பதில்லையென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனம் முன்வைக்கப்படவுள்ளதால் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

## 3.7 மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிவரும் சுகாதார சேவை தொடர்பான பிரச்சினைகள்- கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

### 3.7.1. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவிவரும் ஊழியர்களுக்கான பற்றாக்குறை

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவிவரும் ஊழியர்கள் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் கௌரவ உறுப்பினர் அவர்கள் முன்வைத்துள்ள பெயர் பட்டியலுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் நியமனங்களை வழங்க முடியுமென கௌரவ தவிசாளர் கருத்து தெரிவிததார்.

### 3.7.2. வாழைச்சேனை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

வாழைச்சேனை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடமொன்று நிர்மாணிக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுகொண்டார்.

### 3.7.3. மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களில் ஒசுசல களைத் தாபித்தல்

மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களில் ஒசுசல கள் தாபிக்கப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த மாதத்திற்குள் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஒசுசல ஒன்றைத் தாபிப்பதாகவும்

ஏனைய பிரதேசங்களில் அவற்றைத் தாபித்தல் தொடர்பில் ஆராய்வதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் தலைவர் குழுவில் அறிவித்தார்.

கௌரவ தவிசாளர், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

### 3.8 மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கழிவுப் பொருட்களை முகாமைத்துவப்படுத்தல்- கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

குறித்த வைத்தியசாலையில் கழிவுப் பொருட்களை முகாமைத்துவப்படுத்துவதற்கான தளமொன்றும் இயந்திரங்களும் இருக்கின்றபோதிலும் அவற்றுள் ஒரு இயந்திரம் அடிக்கடி பழுதடைவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் குழுவில் தெரிவித்தார்.பொது மக்களின் எதிர்ப்புகள் காரணமாக மற்ற இயந்திரத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது பிணிமனைக் கழிவுகள் பாரியளவில் சேர்ந்துள்ளதால் அரசியல் துறை மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து உலக சுகாதார அமைப்பின் சிபாரிசுக்கு அமைய அவற்றை புதைப்பதற்காக 30 பேசஸ் நிலம் பெறப்பட்டுள்ளதாக பணிப்பாளர் குழுவில் தெரிவித்தார்.

### 3.9 அம்பாந்தோட்ட மாவட்ட வைத்தியசாலையில் நிலவிவரும் உணர்விழக்கச் செய்யும் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை மற்றும் தங்காலை ஆரம்ப வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு- கௌரவ நிஹால் கலப்பத்தி

#### 3.9.1. அம்பாந்தோட்ட மாவட்ட வைத்தியசாலையில் நிலவிவரும் உணர்விழக்கச் செய்யும் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை

அம்பாந்தோட்ட மாவட்ட வைத்தியசாலையில் உணர்விழக்கச் செய்யும் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. கௌரவ தவிசாளர், அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

#### 3.9.2. தங்காலை ஆரம்ப வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு

தங்காலை ஆரம்ப வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு சேதமடைந்திருப்பதால் அதனை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் குழுவில் கேட்டுக்கொண்டார்.

தற்காலிக அவசர சிகிச்சைப் பிரிவொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை 2 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

#### 3.9.3. நேரியல் முடுக்கி (Linear Accelerator) ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல்

புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான நேரியல் முடுக்கி இயந்திரங்களை இறக்குமதி செய்யும் போது அவற்றின் செயற்றிறன் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இறக்குமதி செய்யப்படவுள்ள குறித்த இயந்திரங்கள் செயற்றிறன் மிக்க புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டவையென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 3.10 காசநோய் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினை மற்றும் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் செயற்படும் கருத்திட்டங்கள்- கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

### 3.10.1. காசநோய் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினை

கடந்த காலங்களில் சில நிலையங்களைச் சேர்ந்த காசநோய் கட்டுப்பாட்டு உதவியாளர்களுக்கு நுண்நோக்கிகள் தொடர்பான பணிகளில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

தெரணியகல பிரதேசத்தில் அவ்வாறான நிலமை காணப்படுவதால் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 3.10.2. வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் செயற்படும் கருத்திட்டங்கள்

வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களின் ஊடாக ஆரம்ப சுகாதார பாதுகாப்பு தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் போதிய நிலையில் வழங்கப்படுவதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 3.10.3. கரவநெல்ல பிரதேசத்தில் ஒசுசல ஒன்றைத் தாபித்தல்

கரவநெல்ல பிரதேசத்தில் ஒசுசல ஒன்றைத் தாபித்தல் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர், அரச மருந்தகக் கூட்டுத்தாபன தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

## 3.11 மாளிகாவத்தை ஆர் பிரேமதாச வைத்தியசாலை- கௌரவ முஜிபுர் ரஹுமான்

மாளிகாவத்த ஆர் பிரேமதாச வைத்தியசாலையையில் உள்ள 9 மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான 2000 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் கோரப்பட்டபோதிலும் வழங்கப்படவில்லையென பிரதிப் பணிப்பாளர் நாயகம்(வழங்கல்) குழுவில் அறிவித்தார்.

## 3.12 மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையும் மருந்துக் களஞ்சியசாலையும் - கௌரவ ச.வியாழேந்திரன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறை மிகப் பழையதாக இருப்பதால் அதற்கான புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தரைத்தளம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அடுத்த இரு மாடிகளை நிர்மாணிப்பதற்கு 105 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் தேவைப்படுவதாகவும் குழுவில் அறிவிக்கப்பட்டது.

ஒரு மாடியை நிர்மாணிப்பதற்குத் தேவையான 50 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ தவிசாளர், பிரதிப் பணிப்பாளர் நாயகம்( வழங்கல்) இற்கு ஆலோசனை வழங்கினார்.

பழைய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள மருந்துகள் களஞ்சியச்சாலைக்கான புதிய கட்டிடத்தினை நிர்மாணிக்கும்போது ஒருங்கிணைப்புடன் செயற்படுமாறு கௌரவ தவிசாளர், கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா அவர்களிடம் கேட்டுக்கொண்டார்கள்.

## 3.13 டெங்கு நோய் பரவுதல்

பொதுவாக ஜுன் மற்றும் ஜுலை மாத ஆரம்பத்தில் டெங்கு நோய் அதிகமாக பரவிவருவதாக குழுவில் அறிவிக்கப்பட்டது. கலுத்துறை மாவட்டத்தில் நாகரீக மற்றும் கிராமிய பகுதிகளில் டெங்கு நோய் முன்னரைவிட அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வருடம் டெங்குவினால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

“டெங்கு நோய் தொடர்பான தேசிய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்” என்ற பதவி நியமனக் கடிதத்தை டாக்டர் ஹசித்த திசேரா அவர்களுக்கு வழங்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

டெங்கு நோய் பரவுதல் பற்றி வாராந்தம் அவதானிக்கப்பட்டு அதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளரால் , மேலதிக செயலாளர்( பொது மக்கள் சுகாதார சேவைகள்), டாக்டர் திருமதி ரீ.எல்.சீ.சோமதுங்க அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**3.14 “ கொத்தல ஹிம்புட்டு” தொடர்பான தற்போதைய நிலை- கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

தடை செய்யப்பட்டிருந்த “கொத்தல ஹிம்புட்டு” ஏற்றுமதி தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

“கொத்தல ஹிம்புட்டு” மூலிகையை ஏற்றுமதி செய்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளபோதிலும் அவற்றை பெற்றுக்கொள்ளக்கூடிய தோற்றுவாய்கள் பற்றி வெளிப்படுத்தப்பட்டில்லையெனவும் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவேண்டிய போதிலும் அத் திணைக்களம் அது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிடப்பட்டது.

அரசு தனியார்த்துறையின் ஒருங்கிணைப்புடன் இம் மூலிகையை பயிரிடும் இயலுமை தொடர்பில் ஆராய முடியுமென கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**4.** குழு பி.ப.5.20 மணிக்கு, 2019.08.22 ஆம் திகதி பி.ப.2.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**ஆறாவது கூட்டம்- 2019 ஜுலை 25**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்**
கௌரவ புத்திக பத்திறண (தவிசாளர்)
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ கே.கே. பியதாஸ

**சமூகமளித்த குழு அல்லாத உத்தியோகத்தர்கள்**
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம
கௌரவ நிமல் லான்சா
கௌரவ ஆனந்த அலுத்கமகே
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

## 1. கூட்டக் குறிப்புகளால் எழும் விடயங்கள்

### 1.1 புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல்

ஜூன் மாதம் 06 விற்பனை நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்துவரும் இரு வாரங்களுக்குள் 17 கூ.மொ.வி. நிலையங்கள் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 1.2 கூ.மொ.வி.நிலையங்களின் ஊடாக மனுபானம் விற்பனை செய்யப்படல்- கௌரவ ஆனந்த அலுத்கமகே

கூ.மொ.வி.நிலையங்களின் ஊடாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதன் ஊடாக மதுபான விற்பனை நிலையங்களில் இடம்பெற்றுவரும் ஊழல்களைத் தவிர்க்க முடியுமென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

### 1.3 நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல்

இறுதிச் சட்டவரைபு அடுத்த வாரம் கையிளிக்கப்படவுள்ளதாக சட்ட வரைபாக்கல் திணைக்களம் அறிவித்துள்ளதாக பணிப்பாளர் (சட்டம் மற்றும் வலுப்படுத்தல்) குழுவில் அறிவித்தார்.

2019 செப்தெம்பர் 15ஆம் திகதிக்கு முன் சட்ட வரைபினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

### 1.4 காலி, இமதூவ என்ற இடத்தில் புதிதாக தொழில்நுட்பக் கல்லூரியொன்றை (TET) ஆரம்பித்தல் - கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

சம்பந்தப்பட்ட அறிக்கை தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

### 1.5 கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்- கௌரவ மயந்த திசாநாயக்க

குறித்த விடயம் பற்றி அமைச்சரவை விஞ்ஞாபன வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

சுவீகரிக்கும் ஆரம்ப கட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் திரு. லால் பிரியந்த குழுவில் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் அவர்களின் ஒருங்கிணைப்புடன் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கௌரவ தவிசாளர்,கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

### 1.6 கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த கனிய மணலை மீட்ட தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதி- கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு அமைய அக் கம்பனியின் மொதத செலவினைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலதிக செயலாளர் திரு. மித்திரபால குழுவில் தெரிவித்தார்.

### 1.7 முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்காத நிலையில் உள்ள அரிசி ஆலைகளை மீண்டும் இயக்குதல் அரச சார்பற்ற நிறுவனங்களால் தாபிக்கப்பட்ட சிறு கைத்தொழில் சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல் - கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

அடுத்த கூட்டத்தில் குறித்த விடயம் பற்றி மேலும் ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**1.8 ஜாவத்த சலுசல நிறுவனம் மற்றும் இராஜகிரிய அரச வாணிப கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் கைப்பற்றப்படல்- கௌரவ புத்திக பதிரண**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்லான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

**2. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

**2.1. வரை/ப கிழக்கு ஹேவாகம கோரலை கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிக் கிளையில் வைப்பிடப்படப்பட்ட பணம் தொடர்பில் இழைக்கப்பட்டுள்ள மோசடிகள் (பிரேரணை இல. 143) - கௌரவ தினேஷ் குணவர்தன**

குறித்த விடயம் பற்றி அடுத்த கூட்டத்தில் மேலும் ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**2.2. அக்மீமன தேர்தல் தொகுதியைச் சேர்ந்த அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியில் புதிய தொழிற்பயிற்சி நிலையமொன்றைத் தாபித்தல்- (பிரேரணை இல. 144) கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

மாத்தறை ராகுல வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியில் புதிய கைத்தொழில் பயிற்சி நிலையமொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.3. சிற்பிகள் மற்றும் தங்க நகை உற்பத்தியாளர்களுக்கு சுயதொழிலுக்கான உபகரண தொகுதிகளை வழங்கல்- (பிரே இல. 146) – கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

சுய தொழில் உபகரணத்தொகுதிகள் தேவையான பிரதேசங்கள் பற்றி குறிப்பிடுமாறு கௌரவ உறுப்பினருக்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர், தேசிய வடிவமைப்பு நிலையத் தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

**2.4. சுற்றுலா வர்த்தகம் தொடர்பிலான ஆக்குநர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்துவரும் லக்சல போன்ற நிறுவனங்களால் அவற்றுக்கான உத்தரவாத விலையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்- (குறிப்பிட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய காசோலைகளை வழங்கல்) (பிரே இல. 147) – கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

குறித்த விடயம் பற்றி ஆராய்ந்து துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளரினால் லக்சல பிரதம நிறைவேற்றதிகாரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

குறித்த பிரேரணை சம்பந்தமான அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு கௌரவ உறுப்பினர்களுக்கு விரைவில் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

**3. வேறு விடயங்கள்:**

**3.1 அரச தொழில்முயற்சிகள் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் முறையாக சமர்ப்பிக்கப்படாமை**

கௌரவ சபாநாயகரின் ஆலோசனைக்கு அமைய அரச தொழில்முயற்சிகள் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை குறித்த கால எல்லைக்குள் சமர்ப்பிப்பதற்கான

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

2017 ஆம் ஆண்டுவரையான ஆண்டறிக்கைகளை இரு வாரங்களுக்குள் முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை இவ்வருடம் செப்தெம்பர் 30 திகதியின்போது முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவில் கலந்துகொள்ளாமைக்கான காரணத்தை வினவுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 3.2 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட கூட்டமைப்புத் திட்டங்களை (Corporate Plan) சரியான முறையில் முன்வைத்தல்

அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் யாவும் ஐந்தாண்டு கூட்டமைப்புத் திட்டங்களை சரியான முறையில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

அத் திட்டங்களை 2019 ஆம் ஆண்டு முதல் அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு திட்டமிடுமாறும் 2019 ஒக்றோபர் 31ஆம் திகதியின்போது குறித்த அறிக்கைகளை முன்வைப்பதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

### 3.3 எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலையை துரிதமாக ஆரம்பித்தல்

கௌரவ அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலையை துரிதமாக ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

### 3.4 பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்தின் அலுவல்கள், கப்பல்கள் தாமதித்தல், அதன் ஆவணங்களுக்கான கட்டணங்களைக் குறைத்தல், கப்பல் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள காணி பற்றி இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்தாலோசித்தல்

பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்தின் அலுவல்கள், கப்பல்கள் தாமதித்தல், அதன் ஆவணங்களுக்கான கட்டணங்களைக் குறைத்தல், கப்பல் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள காணி ஆகிய விடயங்கள் பற்றி இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்தாலோசித்தல் ஆகிய அமைச்சின் விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் மேலும் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

### 3.5 கிளிநொச்சியில் லங்கா ச.தொ.ச கட்டிடத்தில் அமைந்துள்ள இரண்டு திரைப்பட மாளிகைகளை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்

இரு தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் குறித்த தீர்மானங்களை முன்னெடுப்பது தொடர்பில் கலந்தாலோசிக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

திரைப்பட மாளிகையை திறந்துவைக்கும் நிகழ்ச்சியுடன் இணைந்து கூ.மொ.வி.மெகா விற்பனை நிலையம், உணவு விற்பனை நிலையம், சிறுவர்பூங்கா, லக்சல விற்பனை

நிலையம் ஆகியவற்றையும் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**4. ஒத்திவைப்பு**

கூட்டம் பி.ப.1.05 மணிக்கு 2019.08.23 ஆம் திகதி மு.ப.9.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------

**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை, கைத்தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**

**ஏழாவது கூட்டம் -2019 ஆகஸ்ட் 23**

**சமூகமளித்த குழு உறுப்பினர்கள்-**

கௌரவ றிஸாட் பதியுதீன் (தவிசாளர்)
கௌரவ புத்திக பத்திறண (தவிசாளர்)
கௌரவ கருணாரத்ன பரணவிதான
கௌரவ கே.கே. பியதாஸ
கௌரவ மயில்வாகனம் திலகராஜா

**1. கூட்டக் குறிப்புகளுக்கான அங்கீகாரம்**

கூட்டக் குறிப்பின் 4.6 பிரிவு திருத்தப்பட வேண்டுமென குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

**“4.6 கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த கனிய மணல் மீட்கப்படல் தொடர்பில் தனிப்பட்ட முதலீட்டாளருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி**

i. **சிதைவடைந்த கப்பலில் இருந்து இல்மனைட்டினை மீட்பதற்கான நியாயமான ஆகுசெலவினை குறித்த விடயம் தொடர்பிலான சந்தைப் பெறுமதி பற்றிய நிபுணத்துவத்தினையும் திறன்களையும் கொண்ட உத்தியோகத்தர்களின் குழுவொன்றின் ஊடாக மதிப்பீடு செய்து, அத்தொகையைக் கொண்டு ஆசா லங்கா நிறுவனத்திடமிருந்து லங்காமினரல் சேன்ட்ஸ் நிறுவனத்துக்கு அறவிடப்படவிருக்கும் மொத்த அறவீடுகள் மற்றும் செலுத்துகைகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

ii. **மேற்குறிப்பிடப்பட்டவாறு செலுத்தப்படுவதற்கு முன் கடலின் அடித்தளத்தில் தற்போது மீதியாகவுள்ள கப்பலின் மொத்த சிதைவுகளை ஆசா லங்கா நிறுவனத்தினால் நீக்கப்படல்.**

**அதற்கமைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பொறுத்தமான உத்தியோகத்தர்களை பெயர் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு 2019.07.23 ஆம் திகதி வர்த்தக கப்பல் பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச வர்த்தக திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.”**

2019.07.25 ஆம் திகதி நடைபெற்ற ஆறாவது கூட்டக் குறிப்புகளுக்கான அங்கீகாரம் பின்வரும் திருத்தங்களின் கீழ் வழங்கப்பட்டது.

## 2. 2019.08.23 ஆம் திகதி நடைபெற்ற ஆலோசனை குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள்

### 2.1 புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களைத் திறந்துவைத்தல்

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் 15 புதிய கூ.மொ.வி. நிலையங்களைத் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இன்னும் 15 நிலையங்களை அடுத்த மாதம் திறந்துவைப்பதாகவும் கூ.மொ.வி. நிலைய பிரதம பதவிநிலை உத்தியோகத்தர் குழுவில் தெரிவித்தார்.

கூ.மொ.வி. நிலையக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்ட மாதம் தொடக்கம் மட்டுமே வாடகை செலுத்தப்பட வேண்டுமென கௌரவ தவிசாளர், உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார். புதிதாக திறந்துவைக்கப்படவுள்ள எல்லா நிறுவனங்களையும் 2019 ஒக்றோபர் 15 ஆம் திகதிக்கு முன் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 2.2 நுகர்வோர் சேவைகள் அதிகார சபைச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல்

2019 செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன் சட்ட வரைபினை பாராளுமன்றததிற்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 2.3 காலி, இமதூவ என்ற இடத்தில் புதிதாக தொழில்நுட்பக் கல்லூரியொன்றை (TET) ஆரம்பித்தல் - கௌரவ சந்திம வீரக்கொடி அவர்கள்

குறித்த விடயம் தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதால் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென மேலதிக செயலாளர்( கைத்தொழில் பயிற்சி) திருமதி அநுராதா இலேபெரும் குழுவில் தெரிவித்தார்.

### 2.4 கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பொத்தபிட்டிய கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்- கௌரவ மயந்த திசாநாயக்க

காணி சுவீகரிக்கப்பட்டபின் அமைச்சரவை விஞ்ஞாபன வரைபினை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

### 2.5 முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்காத நிலையில் உள்ள அரிசி ஆலைகளை மீண்டும் இயக்குதல் - கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்டபின் சம்பந்தப்பட்ட அரிசி ஆலையை புனரமைக்க முடியுமென கூட்டுறவு ஆணையாளர் குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர், குறித்த விடயம் பற்றிய அறிகையொன்றை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவு ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 2.6 முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் தாபிக்கப்பட்ட சிறு கைத்தொழில் சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்- கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

குறித்த விடயம் பற்றிய அறிக்கையொன்றை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. பண்டாரவிற்கு ஆலோசனை வழங்கினார்.

**2.7 எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலையை துரிதமாக ஆரம்பித்தல்**

குறித்த விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்துள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ பிரதம அமைச்சரின் ஆலோசனையின் கீழ் குறித்த காணியின் ஒரு பகுதியை சுற்றுலா அபிவிருத்திச் சபைக்கு பெற்றுக்கொடுக்குமாறும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.8 பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்தின் அலுவல்கள், கப்பல்கள் தாமதித்தல், அதன் ஆவணங்களுக்கான கட்டணங்களைக் குறைத்தல், கப்பல் கூட்டுத்தாபனம் அமைந்துள்ள காணி ஆகிய விடயங்கள் பற்றி இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்தாலோசித்தல்**

பரந்தன் கெமிகல்ஸ் நிறுவனத்தின் அலுவல்களை ஒரு மாதகாலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

கம்பல் காலதாமதங்கள் மற்றும் அவற்றின் ஆவணங்களுக்கான கட்டணங்களைக் குறைத்தல் தொடர்பில் இந்திய தூதரக செயலாளருடன் கலந்தாலோசித்து தீர்மானங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**2.9 கிளிநொச்சியில் லங்கா கூ.மொ.வி. நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ள இரண்டு திரைப்பட மாளிகைகளை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்**

இரு வாரங்களுக்குள் திறந்த விலைமனுக்கோரலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விலைமனுக்கள் கிடைத்தபின் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கு சிரைப்பட மாளிகையை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் தீர்மானிக்க முடியுமெனவும் கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

யோக் வீதியில் அமைந்துள்ள லக் கூ.மொ.வி நிலையம் மற்றும் லக்சல நிறுவனத்துக்குச் சொந்தமான காணிகளை 10அல்லது 15 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

**3. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

பின்வரும் பிரேரணைகள் தொடர்பான அமைச்சின் செயலாளரின் அறிக்கைகள் கௌரவ உறுப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவில் தெரிவித்தார்.

**3.1. வரை/ப கிழக்கு ஹெவாகம கோரலை ப.கூ.சங்கத்தின் ஊழல்கள் தொடர்பிலான வெளிப்படுத்தல்- (பிரே இல. 143) – கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள்**

**3.2. காலி, அக்மீமன தலகா சந்தியில் அமைந்துள்ள 1800 சதுர அடிகளைக் கொண்ட, நீர், மின்சார வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட கட்டிடமொன்றில் காலி மாவட்டத்தைச் சேர்ந்த அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவிற்கான புதிய கூ.மொ.வி. நிலையமொன்றை ஆரம்பித்தல்- (பிரே இல. 145) – கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி.**

## 4. வேறு விடயங்கள்

### 4.1. கருங்கல் ஆலைகளுக்குத் தேவையான வெடி மருந்துகள் உட்பட்ட விடயங்கள்- கௌரவ கே.கே.பியதாச

#### 4.1.1. கருங்கல் ஆலைகளுக்குத் தேவையான வெடி மருந்துகளை தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுதல்

நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அலுவல்கள் உட்பட்ட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான கருங்கட்களை தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதற்காக கருங்கல் ஆலை உரிமையாளர்களுக்கு வெடி மருந்துகைள தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைமையொன்றை அமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

குறித்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

#### 4.1.2. “இலங்கையை கட்டியெழுப்புவோம்” (நங்வமு லங்கா) நிதி ஏற்பாடுகளை தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுதல்

இலங்கையை கட்டியெழுப்புவோம்” (நங்வமு லங்கா) கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை தாமதமின்றி பெற்றுக்கொள்ளக்கூடிய முறைமையொன்றை அமைக்குமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

அரச வாணிப கூட்டுத்தாபனத்தின் மூலம் 50 மில்லியன் ரூபாவிற்கு உட்பட்ட பெறுமதியுடைய பொருட்களை விலைமனுக்கோரலின்றி பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

#### 4.1.3. சிற்றளவிலான தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

சிற்றளவிலான தொழில்முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டுவருபவர்களுக்குத் தேவையான தையல் இயந்திரங்களை விரைவில் பெற்றுக்கொடுப்பதாகவும் அத்துடன் புதிதாக தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் குழுவில் அறிவித்தார்.

அமைச்சின் கீழ் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு ஒவ்வொரு தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால் அவற்றை கொள்வனவு செய்து வழங்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 4.2. நுவரெலியா-தலவாக்கலையை மையமாகக் கொண்டு தமிழ் மொழிமூல கைத்தொழில் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்தல்- கௌரவ மயில்வாகனம் திலகராஜா

நுவரெலியா-தலவாக்கலையை மையமாகக் கொண்டு தமிழ் மொழிமூல கைத்தொழில் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட எல்ரீரீ இயக்க உறுப்பினர்கள் தொழிலற்ற பிரச்சினையை எதிர்நோக்கிவருவதால் அவர்களுக்கான கைத்தொழில் பயிற்சிப் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

அதேபோல் லக் சதொச போன்ற பொது மக்களுடன் அதிகளவில் தொடர்புடைய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் தொடர்பில் Soft Skills Development நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் யுனிவர்சிட்டி கொலேஜ் இற்கான இடவசதிகள் இல்லாததால் அதற்கு அண்மையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள கூ.மொ.வி. நிலையக் கட்டிடத்தைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

**5. ஒத்திவைப்பு**

கூட்டம் மு.ப.10.45 மணிக்கு 2019.09.19 ஆம் திகதி மு.ப.9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

------------------------------